# போராட்டம்

2014 மார்ச் | இதழ் 10 | இப்பத்திரிகை மக்கள் போராட்ட இக்கத்தின் வெளியீடு | 30.00 ரூபா

# அரச அடக்கு முறை தீவிரம்

# மக்கள் போராட தயார்!

ஜெனீவாவில் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் நிராகரிப்பதாக ஜனாதிபதி வெளியிட்ட தான்தோன்றித்தனமான அறிக்கையினால் அழுத்தங்கள் தீவிரமாகுமென முன்னிலை சோஷலிஸக் கட்சி கூறுகிறது.

இம்முறை நடந்த மேல் மற்றும் தென்மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியை, கடந்தகால தேர்தல்களோடு ஒப்பிடும்போது அரசாங்கத்திற்கு கிடைத்த பின்னடைவாகவே கருதவேண்டி உள்ளது. இதனால் ஏற்படக்கூடிய பின்விழைவுகள் காரணமாக மாற்றுக்

2 ஆம் பக்கம் பார்க்க...

## இம்முறை ஏப்ரல் ஞாபகார்த்தம் நாடு பூராவும்

இலங்கை சமூகத்தின் மத்தியில் சமவுடைமையைக் கட்டியெழுப்புவதற்காக எழுச்சி பெற்ற முதலாவது ஆயுதப் போராட்டம் 1971 ஏப்ரல் 5ம் திகதி நடந்தது. ஏப்ரல் போராட்டத்தின் 43வது ஞாபகார்த்த நிகழ்வுகள் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவிருப்பதாக முன்னிலை சோஷலிஸக் கட்சி கூறுகிறது. இந்த நினைவு கூரலை கட்சி வட்டத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாது

2 ஆம் பக்கம் பார்க்க...

## 44ஆவது ஏப்ரல் வீரர்கள் ஞாபகார்த்த தினம்



ஒடுக்கு முறைக்கு உள்ளானமக்களின் எழுச்சியை முறியடிக்க அம்மக்கள் மீதாக படுகொலை கலாச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியை தோற்கடிக்க முடியாமல் அதிகார வர்க்கம் திணறிக்கொண்டிருக்கிறது.

3 7 10

# மக்களின் ஜனநாய உரிமையை மறுக்கும் ராணுவ அரசை எதிர்த்து போராடுவோம்!

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

தர்மபுரம் பகுதியில் நடந்த பாலேந்திரா ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் விபூசிகா கைதும், மன்னாரில் ஒட்டப்பட்டுள்ள தேடப்படும் நபர்கள் குறித்த சுவரொட்டியும் எதிர்வரும் நாட்களில் நடக்கவிருக்கின்ற மாகாணசபை தேர்தல் பெருவெற்றிக்கா மகிந்த அரசால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படுகின்ற இனவாத நடவடிக்கைகளே!

ஐ.நா மனித உரிமை சபையில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்த பிரேரணை பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய வேளையில், மகிந்த அரசு காணாமல் போனவர்களுக்காக போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற உறவினர்களையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் பழிவாங்கும் நோக்கில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இதன் மூலமாக இந்த அரசு மக்களுக்கு ஜனநாயகத்தை மறுக்கின்ற தனது போக்கிலிருந்தும்-இனவாதம், மதவாதம் கொண்டு மக்களை மோதவிட்டு நாட்டை மோசமான நிலைமைக்குள் இழுத்து செல்வதிலும் இருந்தும் பின்வாங்கப் போவதில்லை என்பது தெளிவாக தெரிகின்றது.

ஜெயக்குமாரி அவரது குடும்பத்தில் இரு ஆண்களை வன்னி யுத்தத்தில் இழந்ததுடன், எஞ்சியிருந்த மகனை யுத்தத்தின் இறுதியில் 2009ம் ஆண்டு ராணுவத்திடம் கையளித்து விட்டு அவர் எங்கிருக்கின்றார் என்று தெரியாது மகள் விபூசிகாவுடன் தேடி அலையாத முகாம் கிடையாது.

இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களை விடுவிக்க மற்றும் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என அறிய பல உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்த போது அவர்களுடன் இவர்களும் இணைந்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்த வேளையில் எல்எல்ஆர்சி (டுடுசுஊ) வெளியிட்ட கைதிகள் தொடர்பான புத்தகம் ஒன்றின் அட்டைப்படத்தில் இவரது மகன் ராணுவ தடுப்பு முகாமில் இருக்கின்ற படம் வெளியாகியிருந்தது. இது ஜெயக்குமாரிக்கும் அவரது மகள் விபூசிகாவிற்கும் தமது உறவு உயிருடன் உள்ள நம்பிக்கையினை கொடுத்ததுடன், உறவுகளை தேடும் ஒரு அடையாள சிறுமியாக விபூசிகா தனது தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமாக பிரபல்பம் அடைந்திருந்தாள்.

அரச படைகள் காணாமல் போன உறவுகளிற்காக போராட்டங்களை முன்னெடுப்பவர்களையும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களிற்கு இது குறித்த விபரங்களை தெரிவிப்பவர்களையும் அச்சுறுத்துவதற்க்காகவும், எதிர்காலத்தில் காணாமல் போனவர்களிற்க்காகவும் காணாமல் போகவிருக்கின்றவர்களிற்க்காகவும் மக்கள் போராடுவதனை இல்லாது செய்வதற்க்காகவும் திட்டமிட்டு செயலாற்றுகிறது. சிறுமி விபூசிகாவையும் அவரது தாயையும் புலிகளிற்கு ஒழிந்திருக்க இடம் கொடுத்தது போன்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றி, கைது செய்து பூஸா முகாமிலும், சிறுவர் நன்னடத்தை மற்றும் புனாவாழ்வு முகாமிலும் அடைத்துள்ளது. இந்த நாடகத்தில் சூட்டுக்கு காயமடைந்ததாக கூறப்படும் படையினர் குறித்தோ அன்றி துப்பாக்கி பிரயோகம் செய்ததாக கூறப்பட்ட நபர் குறித்த எந்த தகவல்களும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

மகிந்தா ஆட்சியில் காணாமல் போன உறவுகளை தேடுவதும் மனித உரிமைகள் பற்றி கதைப்பதும் பயங்கரவாதமாகி விட்டன.

புலிகள் மீளவும் இயங்குகின்றனர் என பிரச்சாரப்படுத்துவதன் மூலம் தெற்கிலே இனவாதத்திற்கு பலியாகிப்போன மக்களிற்கு அச்சத்தை ஊட்டி தம் பின்னால் வைத்திருக்க அரசு முயல்கிறது. மேலும் அதிகரித்து செல்லும் வாழ்க்கை செலவு மற்றும் சமூக பொருளாதார காரணிகளை முன்னிறுத்தி அரசிற்கு எதிராக எழும் மக்களின் போராட்டங்களை மழுங்கடித்து தமது ஆட்சி அதிகாரத்தை ஸ்த்திரப்படுத்த மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கின்றது அரசு.

வன்னி யுத்தத்தின் பின்னர் தெற்கில் இந்த அரசிற்கு எதிரான பல மக்கள் போராட்டங்கள் நடந்துள்ளன. மீனவர்கள் எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக போராடிய போதும், சுதந்திர வர்த்தக வலயத்தில் சேமலாபநிதி மோசடிக்கு எதிராக போராடி போதும், கம்பகாவில் சுத்தமான குடிநீருக்காக மக்கள் வீதிகளில் இறங்கி தமது ஜனநாயக உரிமைகளிற்க்காக போராடிய போதும் இந்த அரசு அவற்றை பயங்கரவாத நடவடிக்கை போன்று ராணுவத்தினை கொண்டு துப்பாக்கி சூடுகள், உயிர்ப்பலிகள் மூலம் அடக்கி ஒடுக்கியது. பெரும்பான்மை சிங்கள மக்கள் இந்த அரசினை பற்றி தமது சொந்த அனுபங்களினூடாக புரிந்து கொண்டுள்ளதுடன், வடக்கு-கிழக்கு மக்களிற்கு கடந்த பல பத்தாண்டுகளாக என்ன நடந்துள்ளது என்பதனை தமது சொந்த அனுபவங்களின் மூலம் புரிந்து கொள்ள முடிவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் காலியில் சமூக ஆர்வலர் ஒருவர் தொழிற்சாலை ஒன்றினால் சூழல் மாசடைவது குறித்து மக்களிற்கு விழிப்புணர்வினை ஏற்ப்படுத்திய போது கொழும்பிலிருந்து விசேடமாக சென்ற சிலர் அவரது வீட்டில் வெடி குண்டொன்றை வைத்து விட்டு சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்தார் என கைது செய்திருந்தனர். கல்வியை தனியார் மயமாக்குவதற்கு எதிராக போராடும் மாணவர்கள் மீது அவர்களது கல்வி உரிமையினை மறுப்பது தொடங்கி அச்சுறுத்தல், கைதுகள் என அரச ஒடுக்குமுறை நீடித்து செல்கின்றது.

இந்த அரசு சிறுபான்மை இன மக்களை மட்டும் அடக்கி ஒடுக்கவில்லை. தனது ஆட்சி அதிகாரத்திற்கும் சுரண்டலுக்கும் எதிராக எழும் பெரும்பான்மை சிங்கள மக்களையும் போலி குற்றச்சாட்டுகள் மீது கைது செய்து, சிறையில் அடைப்பதுடன் மக்கள் போராட்டங்களை ஆயுதப்படைகளை கொண்டு அடக்கி ஒடுக்கின்றது.

யுத்தத்தில் புலிகளை இந்த அரசு வெற்றி கொண்டுள்ளது. ஆனால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதற்க்கான அரசியல் காரணங்களிற்கு தீர்வு காண கடந்த ஐந்து வருடங்களில் எந்த முன்முயற்சியையும் இந்த அரசு எடுக்கவும் இல்லை. எதிர்க்கட்சிகளும் இது பற்றி அக்கறை கொண்டதும் கிடையாது.

மாறாக நில அபகரிப்பு, ராணுவ பிரசன்னம், ஜனநாயக உரிமைகளிற்க்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்து செல்வதுடன் தமிழர்களை அடிமைகள் போன்று மகிந்த அரசு நடாத்துகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் இவற்றினை கருத்தில் எடுத்து போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மாறாக, தமிழ் மக்களை தமது "தமிழ் இனவாத" அரசியல் எல்லைக்குள் முடக்கி வைத்து அரசியல் இலாபங்களிற்காக மக்களின் ஜனநாயக உரிமைகளிற்க்கான போராட்டங்களை பயன்படுத்திக் கொள்வதுடன், அந்நிய நாடுகள் எல்லாவற்றினையும் தீர்த்து வைக்கும் அவர்களிடம் முறையிடுங்கள் என மக்கள் போராட்டங்கள் நீர்ந்து போகும் வண்ணம் செயற்படுகின்றன.

தமிழ், முஸ்லீம் மக்கள் அரசிற்கு எதிராக போராடும் சாதாரண உழைக்கும் சிங்கள மக்களின் போராட்டங்களுடன் தங்களைஇணைத்துக் கொள்வதன் மூலமும் உழைக்கும் சிங்கள மக்கள் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இன மக்களின் போராட்டங்களுடன் தங்களை இணைத்துக் கொள்வதன் மூலமும் தான் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களை வலுப்பெற்றச் செய்து அரச பயங்கரவாதத்தினை முறியடிக்க முடியும்.

# அ.ப.மா.ஒன்றிய செயலாளர் மீது சீ.ஐ.டீயினர் தாக்குதல்

" நாங்கள் சீ.ஐ.டீயினர். இவன் ஒரு திருடன்" எனக் கூறி அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னிலை செயற்பாட்டாளர்களில் ஒருவரை அரசாங்க பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகள் தாக்கியுள்ளனர். ருஹுனு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கற்கும் மாணவரான ஹரித்த லக்மால் என்பவரே மார்ச் 19ம் திகதி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். "கல்வியை விற்றல் மற்றும் மாணவர் அடக்குமுறைக்கு எதிராக" களனி பல்கலைக் கழகத்திலிருந்து கொழும்பு கோட்டை வரை மாணவர்களால ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடைபயணத்தில் பங்குபற்றிவிட்டு கொம்பனி வீதி மக்கள் வங்கிக்கு சென்றவேளையில் சீ.ஐ.டீ.யினர் தன்னை சுற்றிநின்று தாக்கியதாகவும், அப்போது அவ்விடத்தில் கூடிய பொதுமக்களுக்கு அவர்கள் தமது அடையாள அட்டையை காட்டியதாகவும் லக்மால் "போராட்டத்திடம்" கூறினார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்கை பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விவரித்த அவர், "என்னிடம் விபரங்களை கேட்டனர். நானும் பதிலளித்தேன். எனது முன்னால் நின்றுக் கொண்டிருந்த உமேஸ் என்ற நபர் திடீரென என்னை தாக்கினார். அந்த நபர் சில காலமாக என்னை தொடர்வது எனக்குத் தெரியும். அவர் எனது வீட்டுக்குச் சென்று வீட்டிலுள்ளவர்களை பயமுறுத்தியுள்ளார். உமேஸ் என்ற நபர்தான் என்னை முதலில தாக்கினார். அதன் பின்னர் எல்லோரும் என்னை சுற்றி நின்று தாக்கினர்கள். அவ்விடடத்திற்கு பொது மக்களில் சிலர் வந்தபோது அறிமுக அட்டையை அவர்களுக்கு காட்டினர்" நாங்கள் சீ.ஐ.டீ. யினர். இவன் திருடன்" என்று என்னை காட்டினார்கள். "நான் எதைத் திருடினேன்" என அவர்களைப் பார்த்து கேட்டேன். என்னை ஒரு திருடனாக காட்டுவதற்கே அவர்கள் முயன்றனர்.

## இம்முறை ஏப்ரல் ஞாபகார்த்தம்...

சமூகமயப்படுத்துவதற்கும், போராட்டத்தின் அரசியல் வரலாற்றுப் பாடங்களை மீட்டுப் பார்ப்பதற்காகவும் இதன்போது கவனம் செலுத்தப்படும். ஏப்ரல் போராட்டத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் எதிர்கால கடமைகள் சம்பந்தமாக கருத்தாடல் செய்வதற்கும், போராட்டம் குறித்து வெளிவந்த ஆக்கங்கள் சம்பந்தமான கருத்துப் பரிமாறல்களுக்கும் இந்நிகழ்வுகளின்போது சந்தர்ப்பம் வழங்கப்படவிருக்கிறது.

# அரச அடக்கு முறை தீவிரம்

கருத்து கொண்டவர்களை அடக்குவதற்கான திட்டம் தீவிரமாக செயற்படுத்தப் படுமெனத் தெரியவருகிறது. தேர்தல் நடந்த காலத்தில் அரசாங்கம் தூக்கிப்பிடித்த நவ தாராளமயத்தின் போலி அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிராக பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கல்வி மற்றும் சுகாதார சேவையை வியாபாரமாக்குவதற்கு எதிரான சக்திகள் போராடத் தயாராகி வருகின்றன. இவற்றுக்கெல்லாம் அரசாங்கத்திடம் உள்ள ஒரே பதில் அடக்குமுறைதான். தேர்தல் நடந்து கொண்டிருக்கும்போதே நவ தாராளமய முன்மாதிரியின் ஊடாக நடைபெறும் சூழல் அழிவிற்கு எதிராக போராடிய ஹங்வெல்ல, துன்னான கிராம மக்கள் மீதும், சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்ட நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக தமது வசிப்பிடங்களை பறிக்கப்படுவதை எதிர்த்து போராடிய பொரளை வனாதமுல்ல பகுதி மக்களுக்கும், மார்ச் 19ம் திகதி கல்வியை தனியார்மயப்படுத்துவதற்கு எதிராகவும், மாணவர் அடக்கு முறைக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீதும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தேர்தல் முடிவடைந்து விட்டதால் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை மட்டந்தட்டும் திட்டம் துரிதப்படுத்தப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், இவ்வடக்குமுறைக்கு முகம் கொடுப்பதற்காக போராடும் சமூக சக்திகள் ஒன்றிணைந்து அணிவகுக்கத் தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



# நடிகர்கள் ஏராளம் ஆனால் மேடை வெறிச்சோடியிருக்கிறது

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பற்றியே இந்நாட்களில் முக்கியமாக பேசப்படுகிறது. தேர்தல் நடைபெறும் பகுதிகளில் மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் அதைப்பற்றித்தான் முக்கியமாக பேசப்படுகிறது. அவர்கள் எல்லோருமே ஊடகங்களின் ஊடாகவே உலகைப் பார்க்கிறார்கள். நாட்டின் பெரும்பாலான மக்கள் பூமியில் கால் வைத்திருப்பதில்லை இலத்திரனியல் அலைவரிசைகளின் காந்த சக்திக்கு மேல் அடி வைத்துள்ளார்கள். ஆகவே தாம் வாழும் பிரதேசங்களில் தேர்தல் நடந்தாலும் நடக்காவிட்டாலும் தொலைக்காட்சி திரைகளின் ஊடாக தேர்தல் மேடைகளையே பார்க்கிறார்கள். தேர்தல் மேடைகளில் செவியைப் பிளக்கும் உரைகளின் வாயிலாக கேட்பது என்ன? நீல நிறத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க மேடைகளிலிருந்து அபிவிருத்தி, தேசாபிமானம் என்ற ஓசைகள் கேட்கின்றன. பச்சை, சிகப்பு, மற்றும் ஊதா நிறங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், எதிர்க் கட்சிகளின் மேடைகளிலிருந்து ஜனநாயகத்தைப் பற்றிய அல்லது ஊழல் மோசடிகளுக்கு எதிரான குரல்களே கேட்கின்றன. இவற்றிற்கு மத்தியில் தேர்தலில் சொல்லப்படாத கதையொன்றும் இருக்கிறது. அது எமது நாட்டு மக்கள் வாழ்க்கையின் உண்மையான கதை.

சொல்லாத கதை

அரசாங்கத்திந் உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி கடந்த மாதத்தில் அதாவது 2014 பெப்ரவரி மாதத்தில் 4.2 வீதத்தால் அதிகரித்திருக்கிறது. உணவுப் பொருட்களின் விலை 0.2 வீதத்தாலும், உணவுப் பொருட்களல்லாத அத்தியாவசிய நுகர்பொருட்களின் விலை 0.1 வீதத்தாலும் அதிகரித்திருப்பதாக அந்த புள்ளிவிவரம் கூறுகிறது. ஊடகங்களில் தோன்றி அரசாங்கத்தின் கழிவறைகளை கழுவும் போலி பொருளாதார விற்பன்னர்கள் கூறுவதாவது, நாம் இது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும் என்று. ஜனவரி மாதத்தின் பணவீக்கம் அதிகரிப்பு வேகம் 4.4 வீதத்தை விடவும் பெப்ரவரி மாதத்தின் மதிப்பு குறைந்ததனாலேயே அப்படிக் கூறுகிறார்கள். இந்த விற்பன்னர்கள் எமக்கு சொல்லாத கதை என்னவென்றால் அதிகரித்திருப்பது பொருட்களின் விலைகளல்ல, அதிகரித்தக்கும் வேகம் என்பதாகும். தெளிவாகக் கூறுவதாயிருந்தால் ஜனவரி மாதத்தை விட பெப்ரவரி மாதத்தில் பொருட்களின் விலை குறையவில்லை. ஜனவரியிலும், பெப்ரவரியிலும், மார்ச்சிலும் பல தசாப்தங்களாக நடப்பதைப்போன்று பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. அதிகரிக்கும் வேகம் ஓரளவு கூடும் அல்லது குறையும். ஆகவே இந்த பொருளாதார விற்பன்னர்கள் கூறுவதைப் போன்று எம்மால் மகிழ்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. கணக்கிடப்பட்ட வருடாந்த பணவீக்கம் 6 வீதமாக இருந்தாலும் கடந்த ஜனவரியில் அது 6.5 வீதமாக அதிகரித்தது.

இந்த புள்ளிவிவரங்கள் இல்லாவிட்டாலும் பொருட்கள் வாங்க கடைக்குச் சென்றால் நடந்திருக்கும் அநியாயத்தை கண்கூடாகக் காண முடியும். அரிசியின் விலை இந்நாட்களில் கட்டுப்பாட்டு விலையையும் தகர்த்துக் கொண்டு வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 2009 மார்ச 18ம் திகதி வெளியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானி பத்திரிகையின் மூலம் அரிசிக்கான ஆகக் கூடிய சில்லரை விலை 70 ரூபாவாகும். இந்நாட்களில் சம்பா அரிசியின் சில்லரை விலை 76 □ 78 ரூபாவிற்கிடையில் உள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப, நாடு மற்றும் சிகப்பு அரிசி கிலோ 60 ரூபாயை விட அதிகரிக்கப்படக் கூடாது. ஏன்றாலும், நாட்டரிசி ஒரு கிலோ 65 □ 68 ரூபாவிற்கும், சிகப்பரிசி 66- 68 ரூபாவிற்கும் வாங்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு தேங்காயின் விலை 50.00 □ 60.00 ரூபா. இந்த நிலைமையில் மாதமொன்றுக்கு ஆகக் குறைந்த வருமானமுடைய, ஆனாலும் திறைசேரிக்கு அதிக வருமானத்தை பெற்றுத்தரும் உழைப்பாளர்கள் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்துள்ளார்கள். அவர்களது வேதனை குறித்து எதுவும் தேர்தல் மேடைகளில் கேட்பதில்லை.

எதிர்கட்சிகளின் மேடைகளிலிருந்து பொருளாதார நெருக்கடி குறித்து முனுமுனுப்புகள் கேட்கின்றன. அவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஆதாரங்களை எடுப்பது மக்கள் வாழ்க்கையிலிருந்து அல்ல. கம்பனிகளின் இலாப நட்டக் கணக்குகளிருந்தே எடுக்கிறார்கள். நெஸ்லே (லங்கா) நிறுவனத்தின் 2013 இறுதிக் காலாண்டின் இலாபம் 22 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருப்பதாக எதிர்கட்சியை சார்ந்த ஒரு நாடாளுமன்ற உருப்பினர் கொக்கரித்ததை காணக்கூடியதாக இருந்தது. அவரது கூற்றிற்கு ஏற்ப பொருளாதார நெருக்கடி இருப்பதற்கான உதாரணம்தான் இது. இது குறித்து விசாரித்துப் பார்த்ததில் நெஸ்லே நிறுவனம் நட்டமடையவில்லை என்பதோடு, இறுதி காலாண்டில் 698 மில்லியன் ரூபா இலாபம் பெற்றிருப்பது தெரியவந்தது. அதன் இலாப விகிதம் குறைந்திருப்பது 2013 மூன்றாவது காலாண்டுக் ஒப்பீடாகவேயாகும். 2012 இறுதிக் காலாண்டுக்கு ஒப்பீடாக எடுத்துக் கொண்டால் இலாபம் 6.3 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது. பிரச்சினை என்னவெனில், கம்பனிகளின் இலாப விகிதம் வீழ்ச்சியடைவதல்ல, அதனை அதிகரித்துக் கொள்வதற்காக அடித்தட்டு வர்த்தக மக்களின் உடலை உறிஞ்சுவதுதான். இந்த விடயம் குறித்து தேர்தல் மேடைகளில் யாரும் வாய் திறப்பதே இல்லை.

காற்று வீசம் திசைக்கு பட்டம் விடுதல்

எதிர்கட்சியை சார்ந்தவர்கள் பாட்டாளி வர்க்க மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசாமலிருப்பதைப் பற்றி எங்களுக்கு கோபப்படுவதற்கோ, துக்கப்படுவதற்கோ, ஆச்சரியப்படுவதற்கோ ஒன்றுமில்லை. அரசாங்கம் தமது தேர்தல் வெற்றி குறித்து நம்பிக்கை வைத்திருப்பது இந்த இடைப்பட்ட மக்கள் மீதுதான். அதிவேகப் பாதைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்ற அடிப்படை வசதிகள் அதிகரிக்கப்பட்டமையும், நகரங்களின் நடைபாதைகளை செங்கற்களினால் அலங்கரித்து, பஸ் நிறுத்தும் நிலையங்களை ஐரோப்பிய பாணியில் நிர்மாணிப்பதன் ஊடாக நகர அலங்கரிப்பை இலக்காகக் கொண்டு அவர்கள்தான் செயற்படுகிறார்கள். மன்னார் மற்றும் மாத்தளையை பார்க்காது ஜெனீவாவைப் பார்த்து விரலை நீட்டுவதும் அவர்களை இலக்காகக் கொண்டுதான். விஷேடமாக கட்சி ஜனநாயம் மற்றும் நல்லாட்சி குறித்து பேசுவதும் இந்த இடைப்பட்டவர்களை இலக்காகக் கொண்டுதான். பிரச்சிணை என்னவென்றால் இந்தக் கோஷ ங்களோடு அவர்கள் எந்தளவுக்கு ஒத்துப் போகிறார்கள் என்பதுதான்.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொள்வோம். அது லிபரல் அரசியல் கட்சியாக வடிவமைக்கப்படவிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் லிபரல்வாதம் கருவா தடிகளுடன் செயற்படத் துவங்குகிறது. நாட்டில் ஜனநாயத்தைப் பற்றி பேசுவதோடு, ஐதேக தனது கட்சிக்குள் தோன்றியிருக்கும் பிரச்சிணைகளுக்கு கருவா தடிகளை ஏந்திக் கொண்டே தீர்வு தேடுகிறது. இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்ப்பில் மாகாண சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் நதீஷா ஹேமமாலி தான் வந்தது தெற்கின் கருவாத் தடி படைக்கு தலைமை தாங்கவே என்று பகிரங்கமாக கூறுகிறார். ஐதேக ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சிணையை தீர்க்கப்போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். இன்னொரு விடயம் என்னவென்றால் ஜனநாயகம் சம்பந்தமாகவும் அதற்கு தெளிவான நோக்கம் கிடையாது. நல்லாட்சி பற்றிய நிலை இதுதான். பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நாடாளுமன்ற பொது வியாபாரக் குழு அறிக்கை அல்லது கோப் அறிக்கையின்படி நாட்டினது தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு பணத்திற்கு சமமான பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது வெளிச்சத்திற்கு வந்தது. ரணில் பிரதமாராக இருந்த அமைச்சரவையிலேயே இந்த பக்காத் திருடர்கள் இருந்தனர். ( தற்போது அவர்கள் மஹிந்தர் மடியில் அமர்ந்துள்ளனர்) அப்படியான ஒரு கட்சிதான நல்லாட்சி குறித்து எமக்கு உபதேசிக்கிறது.

சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியை எடுத்துக் கொண்டாலும் நிலைமை இதுதான். எவ்வித வித்தியாசமுமில்லை. பொன்சேகாவின் ஜனநாயகம் சம்பந்தமாக அவர் இராணுவத் தளபதியாக இருந்த காலக்கட்டத்தில் ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன. அனைத்தையும் மறந்தாலும் அந்த ஜனநாயம் குறித்து அவருடைய ஊடகச் செயலாளராக இருந்த நபரிடமிருந்து தகவல்கள் கசிந்துக் கொண்டிருக்கின்றன. பொன்சேகா தனது அலுவலகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மிருகத்தின் பெயர் சொல்லியும், தூஷன வார்த்தைகளாலும் திட்டுவதையும், கட்சிக்குக் கிடைக்கும் நிதியுதவிகளை தனிப்பட்ட பாவனைக்கு எடுப்பது குறித்தும் ஊடகச் செயலாளர் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார். ஜனநாயகம் நல்லாட்சி பற்றி பேசுவது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் முயற்சி மாத்திரமேயாகும்.

மக்கள் விடுதலை முன்னணியும் □தேசிய சுதந்திரம்□ போன்ற கோஷங்களை முன்னெடுத்து அரசாங்கத்தை விமர்சிக்கின்றது. தேசியவாதத்தின் பெயரால் பிற்போக்குத்தனத்தின் அனைத்து அடையாளங்களை உறிஞ்சிக் கொள்வதோடு, நடுத்தர வர்க்கத்திற்குப் பொருத்தமான ' சோஷலிஸ த்தைப்□ பற்றி இரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்கியிருந்தோம். இலங்கையைப் போன்ற வளர்முக நாடொன்றில் காணப்படும் பிற்போக்குக் கொள்கைகளோடு உடன்பாட்டுக்கு வந்து பிரபலமடைவதும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள பாதையை தேடிக் கொள்வதுமே மக்கள் விடுதலை முன்னணியின் முயற்சியாக இருக்கிறது. அதனால் சமூகத்திற்கு என்ன நடக்கும் என்பதில் அவர்களுக்கு பிரச்சினை கிடையாது. இதற்கு சிறந்த உதாரணமாக இருப்பது மக்கள் விடுதலை முன்னணி சமீபத்தில் அஸ்கிரி- மல்வத்து மதத் தலைவர்களை சந்தித்து தனது நற்சான்றிதழை எழுதிக் கொள்ள முயற்சித்தமைதான். அரசாங்கம் தெரிவு செய்திருக்கும் அழிவுப் பாதைக்கு மாற்றீடான பாதையை இவர்கள் யாருமே தெரிவு செய்வதில்லை. அதற்குப் பதிலாக அதே பாதையில் சென்று அரசாங்கத்தை முந்த முடியுமா என்று பார்ப்பதுதான். எதிர்கட்சி என்று சொல்லிக் கொள்ளும் கட்சிகள் தமது அதிகாரப் போட்டிக்கான கோஷமாகவே ஜனநாயகம், நல்லாட்சி அல்லது நவீனத்துவம் போன்ற கோட்பாடுகளை பயன்படுத்துகின்றனர். அந்த கோஷ ங்களைப் பற்றிய கண்ணோட்டமோ, முன்னோக்கோ, தியாகமோ அல்லது சமூகத்தை நிறுவனப்படுத்தும் அபிப்பிராயமோ கிடையாது. காற்றடிக்கும் திசைக்கு பட்டம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த பட்டங்களில் □ஜனநாயம்□, □நல்லாட்சி□ போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தாலும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. □சமவுடமை□ என எழுதப்பட்டாலும் சமவுடமைக்கு எந்த நண்மையும் கிடையாது.

ஏராளமான நடிகர்களுடன்

தற்போதைய நிலத்தோற்றம் இப்படித்தான் இருக்கின்றது. அரசாங்கம் நவ தாராளமய முதலாளித்துவத்தையும், பிற்போக்குத்தனமும் முறைகேடுகளும் நன்றாக கலக்கப்பட்டு கண்காட்சிகளும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஐதேகவும் பொன்சேகாவும் தாங்கள் ஜனநாயகவாதிகள் எனவும், தாராளமய எடுத்துக்காட்டுக்களை மதிப்பதாகவும், ஊழல் மோசடிகளை எதிர்ப்பதாகவும் கூறி மீளுயிர்பெற முயற்சி செய்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி தேசியவாதமும், பிரபலமாகும் வேட்கையும் கலக்கப்பட்ட பாதையில் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வது அல்லது ஆகக் குறைந்தது இருப்பை பாதுகாத்துக் கொள்ளும் போராட்டத்தில் இறங்கியுள்ளது. இதன்படி பார்க்கும்போது மேடையில் ஏராளமான நடிகர்கள் இருக்கிறார்கள். என்றாலும் மேடை வெறிச்சொடிக் கிடக்கிறது. அந்த நடிகர்களின் உரையாடல்களினால் இலங்கையில் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், மற்றும் இளைஞர்களின் குரல் கேட்பதில்லை.

15 ஆம் பக்கம் பார்க்க...

# கொழும்பு எங்களுக்கு சொந்தம் அது ராஜபக்ஷாக்களின் குடும்பச் சொத்தல்ல

கொழும்பு வனாதமுல்லையில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய மக்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து விரட்டுவதற்கான பாரிய திட்டங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கொழும்பில் தோட்டம் என்று கூறப்படும் பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு பல்வேறு வழிகளால் அந்த மக்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். இந்த வற்புறுத்தல்கள் நகர அபிவிருத்தி அதிகார சபை கடிதங்கள் மூலமாகவும். இராணுவ வற்புறுத்தல்கள் மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் கூட்டங்கள் ஊடாகவும் நபர்கள் கடத்தப்படுவது வரை நிலைமை மோசமடைந்துள்ளது.

அரசாங்கம் அவர்களுக்கு தெமட்டகொட, மிஹிதும்புர மாடி வீடுகளில் மாற்று வீடுகள் தருவதாகக் கூறினாலும் அது குறித்து மக்கள் பல கேள்விகளை எழுப்புகின்றனர். அந்தக் கேள்விகளில் முக்கியமாக வீடுகளில் இடவசதி போதாமை, பிரவேசிப்பதில் உள்ள பிரச்சினைகள், கட்டடங்களின் தரம் சம்பந்தமான பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினைகள் போன்றவை அடங்குகின்றன. தாங்கள் முன்பிருந்த வீடுகளை விட புதிய மாடிவீடுகள் சிறியதாகவும், தரக்குறைவானவையாகவும் இருப்பதாக அம்மக்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் அதனை மறுத்ததாக இதுவரை தெரியவில்லை. அதுதான் உண்மை. மறுபுறம் வீடுகள் இல்லாமலாகும் மக்கள் இந்த புதிய வீடுகளை வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். முதலில் ஒரு இலட்சம் ரூபாயை கட்டிவிட்டு எஞ்சிய தொகையை மாதாமாதம் 4000 ரூபாய் வீதம் 20 வருடங்களுக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.





இது அவர்கள் பரம்பரை பரம்பரையாக வசித்து வந்த வீடுகளுக்காக செலுத்த வேண்டிய நட்ட ஈடாகும். இவர்கள் அத்துமீறிக் குடியேறியவர்கள் என்ற அரசாங்கம் கூறுகிறது. அத்துமீறிக் குடியேறியோர் என்போர் யார்? இவர்களில் சிலரிடம் காணிக்கான உறுதிப் பத்திரங்கள் இருக்கின்றன. அதோடு இவர்கள் நீண்ட நெடுங்காலமாக இங்கு வசிப்பதனால் அவர்களக்கு இந்தக் காணிகளில் உரிமை இருக்கிறது. அந்த வீடுகள் வாழையடி வாழையாக சேர்க்கப்பட்ட பெறுமதிகளின் குவியல். அந்த வீடுகளில் வசிப்பவர்களின் நடைமுறை வாழ்க்கையை இலகுவாக்கிக் கொள்வதற்காகவே அந்தப் பெறுமதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பரமாதிபத்தியம் மக்களுக்கு சொந்தமானது என்று கூறும் ஜனநாயக ஆட்சிக்குள் மக்களின் அடிப்படை உரிமையான வசிப்பிடம் சம்பந்தமான உரிமை என்பது நகர அபிவிருத்தி அதிகார சபை கூறுவதைப் போன்று சாதாரணமானதல்ல. ஜனநாயக முறைக்குள் அரசு என்பது மக்களுக்கு சொந்தமானதாகும். அரசாங்கக் காணிகள் என்பது மக்களுக்கு சொந்தமான காணிகளேயல்லாது ஆட்சியாளர்களுக்கு சொந்தமானதல்ல. இந்த அடிப்படையில்தான் காணிகள் சம்பந்தமாக தர்க்கங்களை முன்வைக்க வேண்டும்.

தாம் நீண்ட காலமாக வசித்து வந்த காணிகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்போது, தாம் முன்பு வசித்த வீட்டை விடவும் நல்ல நிலையில் உள்ள வீடொன்றை பெற்றுக் கொள்வதை உறுதி செய்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அடிக்கும் கொள்ளை காரணமாக தரக்குறைவான கோழிக் கூடுகளைப் போன்ற பாதுகாப்பற்ற கட்டிடங்களுக்குள் அவர்களை தள்ளிவிடுவது மனித உரிமை மீறலாகும். இந்த புதிய வீடுகள் அவர்களது வாழ்க்கையை முற்றாக மாற்றிவிடக் கூடும். குறைந்த வருமானமுடைய பெண்கள் இதன்போது பாதிக்கப்படுவது நிச்சயம். அவர்களது சம்பிரதாய வாழ்வாதாரமான கடையப்பம் செய்தல், தையல் மற்றும் வேறு தொழில் சூட்சமங்கள் போன்றவற்றை தொடர முடியாத நிலை உருவாகி அவர்கள் மீண்டும் படுகுழியில் தள்ளப்படுவார்கள்.

அது மட்டுமல்ல, இந்த மாடிவீடுகளுக்கான நுழைவு, மின்தூக்கிகள் போன்றவற்றில் நிலவும் குறைபாடுகள் காரணமாக நெரிசல் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. அந்த வாழ்க்கை அவர்களை புதிய கலாச்சாரத்திற்குள் தள்ளிவிடுவதாக அமையும். இந்த வீடுகளில குசினி மற்றும் கழிவறைகளில் இடவசதி போதாமையினால் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படுமென மக்கள் கூறுகின்றனர்.

இந்த மக்கள் அவர்களது வசிப்பிடங்களிலிருந்து விரட்டப்படுவது எதற்காக? அரசாங்கம் கூறுவதைப் போன்று கொழும்பு நகரில் பெறுமதியான காணிகள் பொருளாதார ரீதியில் பலனளிக்கக் கூடிய திட்டங்களுக்கும் நகரை அலங்கரிப்பதற்கும் பயன்படுத்தப்படவிருக்கிறது. பொருளாதார ரீதியில் பலனளிக்கும் திட்டங்களுக்கு ஈடுபடுத்துவதென்பது அந்தக் காணிகள் உள்நாட்டு வெளிநாட்டு செல்வந்தர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் விற்றுவிடுவதாகும். அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அரசாங்கம் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும். அரசாங்கத்திடமிருந்து மக்களுக்கு கிடைக்கும் சேவைகள் போதுமானதாக இல்லை என்பதை கூற வேண்டியதில்லை. ஆகவே, இத்தியாகங்களினால் மக்களுக்கு கிட்டும் நன்மைகள் என்ன? சில தனவந்தர்களிடம் தமது காணிகளை ஒப்படைத்துவிட்டு, அதிகாரிகளுக் கொமிஸ் கொடுத்து, அரசியல்வாதிகளுக்கு இந்த நாறிக் கிடக்கும் முறையை தொடர்வதற்கு ஏதுவாக அரசாங்கத்திற்கு பணம் தேடிக் கொடுப்பதற்காக இந்த மனிதர்கள் தமது வசிப்பிடத்தை இழப்பது எதற்காக? நகர்புற காணிகளை பலனளிக்கக் கூடியவாறு பயன்படுத்துவது முக்கியமாகும். ஆனாலும், இதன் பலன் மக்களை சென்றடைய வேண்டுமேயல்லாது, உள்நாட்டு, வெளிநாட்டு செல்வந்தர்களுக்கு மாத்திரமல்ல. மக்களுக்கு அதனால் நன்மை கிடைக்காத பட்சத்தில் அந்த பெரிய பலனுக்கு பதிலாக இந்த சிறிய பலன் எவ்வளவோ மேல்.

நாடு எதற்காக அபிவிருத்தியடைய வேண்டுமென்பதை அரசாங்கம் மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும். நாடு அபிவிருத்தியடைவது என்பது அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதாகும். வறுமை ஒழிக்கப்படுவதாகும். பொருளாதார மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் அற்றுப் போவதாகும். அப்படியல்லாமல், சிறு குழுவினர் நாட்டின் வளங்களை வரம்புமீறி குவித்துக் கொள்வதும், வறியவர்கள் மேலும் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுவதும் அபிவிருத்தியல்ல. கொழும்பு தலைநகரம் அபிவிருத்தி செய்ய வேண்டியது கொழும்பில் வசிப்பவர்களோடு கொழும்பு மற்றும் நாட்டின் அனைத்து குடிமக்களுக்காகவுமேயாகும். அவ்வாறில்லாது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செல்வந்தர்கள் சிலருக்காக அல்ல. கொழும்பு என்பது வனாதமுலல்லை சுனில் சமரதீரக்களினதும் எங்களதும் பூமியாகும். ராஜபக்ஷாக்களின் பரம்பரை சொத்தல்ல.

இது வனாதமுல்லைக்கு மட்டுமல்ல, இலங்கையில் எந்த மூலையிலிருந்தாலும் அவர்களையும் சார்ந்ததாகும். இது எங்கள் நாடு. அதை சில காலங்கள் ஆளுவதற்காக உங்களிடம் ஒப்படைத்திருப்பதாக நினைக்கிறோம். நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருப்பதாக எண்ண வேண்டாம்.

வரைமு றையின்றி விதவிதமாக நுகர்வதையும், நுகரும் பொருளை அடிக்கடி மாற்றுவதையும் சந்தை கோருகின்றது. தனிவுடமையில் தொடர்ந்து செல்வத்தை குவித்தல் அடிப்படையாகும். கொடூரமான இந்த சமூகவிரோத செயலால் ஈவிரக்கம், மனிதாபிமானம் போன்ற மனித உணர்வுகள் தோற்று விடுவது போல், பாலியல் உணர்வுகள் கூட நுகர்வு வடிவம் பெறுகின்றது. மனித உழைப்பிலான செல்வத்தை தனிவுடமையாக்கும் விதி, மனித உணர்ச்சியை, உணர்வுகளை, உறவுகளை தனக்கு ஏற்ப மாற்றி விடுகின்றது.

தனிவுடமையில் செல்வத்தைக் குவிக்க, உற்பத்திப் பொருளை மக்களுக்கு விற்க வேண்டும். ஆக இது வரைமுறையற்ற நுகர்வைத் தூண்டி விடுகின்றது. அனைத்தையும் சந்தைக் கலாச்சாரமாக்கி விடுகின்றது. இது மனிதனுக்கு இடையிலான சமூக உறவுகளை மாற்றுகின்றது. பாலியல் நடத்தையை மாற்றி அமைக்கின்றது. சந்தைக்கு மனிதமுகம் இருப்பதில்லை.

சந்தைக் கலாச்சாரமே சமூகத்தையே ஆதிக்கம் செய்வதுடன், வாழ்க்கை அணிதிரளுவது போல், தனிமனித நுகர்வுவெறி சார்ந்த பாலியலா அல்லது சமூக உணர்வு கொண்ட பாலியலா என்பதை தேர்வு செய்து கொள்ள வேண்டியவளவுக்கு, பாலியலை சந்தைக் கலாச்சாரம் ஆக்கிரமித்துள்ளது.

முந்தைய அறிவு சார்ந்த படைப்பாற்றலும், நுகர்வு உணர்ச்சி சார்ந்து உருவாகும் மறுஉற்பத்தியிலான மனித சாரத்தை, சந்தை சார்ந்த நுகர்வு உணர்வு அழித்து விடுகின்றது. உண்மையான சமூகரீதியான மனித உணர்வுக்கு பதில், பொய்மையான நுகர்வு மனித உணர்வாகி விடுகின்றது. சமூகத் தன்மை கொண்ட மனித உழைப்புக்கு நடந்த அதே கதி, சமூக அடிப்படை கொண்ட பாலியலுக்கும் நடந்திருக்கின்றது.

சமூக அடிப்படைக்கு வித்திடும் இயற்கையான பாலியல் செயற்பாடு கூட, இந்த நுகர்வாக்கக் கலாச்சாரத்துக்குள் சிதைந்து இருக்கின்றது. சமூகத் தன்மை கொண்ட பாலியல் நடத்தைக்கு பதில், குறுகிய நுகர்வாக பாலியல் செயற்பாடு மாறி இருக்கின்றது. சமூக உணர்வு சாராத இந்த பாலியல் நுகர்வாக்கம் திருப்தியற்றதாகவும், அடிக்கடி என்பது, நுகர்வு அடிப்படையாகக் கொண்ட விபச்சாரமாகி விடுகின்றது. அதாவது சமூகத்தன்மையற்ற பாலியல் நடத்தை என்பது விபச்சாரம் தான்.

தனிவுடமைச் சமூக அமைப்பில் சமூகவுடமை எப்படி கேலிக்குரியாக்கப்படுகின்றதோ, அதே போல் பாலியல் நடத்தையில் உள்ள சமூகத் தன்மைக்கு பதில் தனிமனிதனின் நுகர்வு நடத்தை முதன்மையாகி இருக்கின்றது.

சமூகத்தன்மை கொண்ட வாழ்க்கையின் எளிமையைக் கடந்து விதம் விதமான ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள், தன் துணையுடன் கூடிய பாலியல் திருப்தியைக் கொண்டு வாழ முடியாதவர்களாகி விடுகின்றனர். நுகர்வை முதன்மையாகக் கொண்டவர்கள் முன்னிறுத்தும் குடும்பம், கட்டுப்பாடுகள், சடங்குங்கள், சம்பிரதாயங்கள் அனைத்தும் போலியான தங்கள் வாழ்க்கையை மூடிமறைக்கும் சாதனமாகி விடுகின்றது. விதம்விதமாக பலருடன் பாலியலை கொள்ளுதலே மகிழ்ச்சி என்று கருதுமளவுக்கு, நுகர்வுப் பண்பாட்டுக் கலாச்சாரமும் மனித உறவுகளை



மார்க்சியம் - 11

ஏகாதிபத்தியத்தில் ஆணாதிக்கம் என்பது, பெண்ணை நுகர்வுக்குரிய சந்தைப்பொருளாக முன்னிறுத்தி விளம்பரப் பொருளாக காட்சிப்படுத்துகின்றது.

சந்தைக் கலாச்சாரத்தில் பெண்ணின் சுதந்திரம், விடுதலை என்பதன் அர்த்தம், நுகர்வாக்கச் சந்தைக்குரிய மாடலாகவும், நுகர்வுக்கு இணங்கி தானும் அனுபவிப்பவளே பெண் என்கின்றது. சமூகக் கூறுகளைக் கொண்ட பெண்ணாக இருத்தலை மறுத்து, பொருளைப் போல் பெண்ணையும் சந்தையில் நுகரக் கூடிய வகையில் பெண்ணை முன்னிறுத்துகின்றது. பெண் இதற்கு உடன்பட்டவளாகவும், தானும் அனுபவிப்பவளாக இருந்தலே பெண்ணின் சுதந்திரம் என்று, ஆணாதிக்க தனிவுடமை நுகர்வு சந்தைக் கலாச்சாரம் உருவாக்குகின்றது.

பெண்ணின் இயற்கை சார்ந்த சமூக உணர்வாக்கத்தை அழித்து விடுவதையே, நுகர்வுப் பண்பாடு செய்கின்றது. இயற்கை சார்ந்த பாலியல் நடத்தை, சமூக உருவாக்கத்தின் அடிப்படையான சமூகக் கூறாகும். உழைப்புக்கு இருக்கும் சமூகத் தன்மை போன்று, இனப் பெருக்கத்துக்கும் காணப்படுகின்றது. மனித உழைப்பு உருவாக்கும் படைப்பாற்றல் போல், இனப்பெருக்கமும் படைப்பாற்றல் கொண்டது. இவ்விரண்டும் சமூகத் தன்மை கொண்டவை.

இயற்கையான பாலியல் செயற்பாடு கொண்டு இருக்கக் கூடிய சமூக ஆற்றல், சமூகத்தை ஒன்றிணைத்து வைத்திருக்கின்றது. இந்த சமூக நடத்தை, தனிவுடமை சார்ந்த நடத்தைக்கு முரணானது.

மனித நடத்தையில் குடும்பம் என்னும் வடிவம், வரைமுறையற்ற காட்டிமிராண்டித் தனங்களைக் கடந்த முன்னேறிய ஒரு சமூக வடிவமே. குடும்பம் தனிவுடமை சார்ந்த ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ குடும்பங்களாகிய போது, பெண்




# நுகர்வாக்கம் உருவாக்கும் பாலியல் கண்ணோட்டம்?

முறையாகி வருகின்றது. சமூக உறவுகள் தொடங்கி பாலியல் உறவுகள் வரையான மனித சாரத்தை, சந்தைக் கலாச்சாரம் வெறும் நுகர்வாக்கத்துக்கு உட்பட்ட ஒன்றாக வக்கரிக்க வைக்கின்றது. இயற்கையான பாலியல் நடத்தைகள் கொண்டிருக்கக் கூடிய சமூக உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கூட, வெறும் நுகர்வாக்கி விடுகின்றது. நுகர்பொருள் சார்ந்ததாக மனித உறவுகள் குறுகி விட, நுகர்வு சார்ந்ததாக பாலியல் உறவுகள் வக்கிரமடைந்து விடுகின்றது.

உலகமயமாதலில் நுகர்வே மனித சாரமாக்கப்படுகின்றது. மனித தேவை சார்ந்த நுகர்வு மறுக்கப்பட்டு, வரைமுறையற்ற நுகர்வு வக்கிரத்தை நுகர்வாக்குகின்றனர். இதன் மூலம் நுகர்வே எல்லாமாகி விடுகின்றது. பண்பாடு, கலாச்சாரம் அனைத்தும் நுகர்வுப் பண்பாடாகி விடுகின்றது.

பாலியல் கொண்டிருக்கக் கூடிய சமூகத் தன்மையை சந்தைக் கலாச்சாரம் இல்லாதாக்கியுள்ளது. அதனிடத்தில் பொருளை நுகர்வது போல் பாலியலை சமூக உணர்வற்ற நுகர்வாக்கி, மனித சாரத்தை இல்லாதாக்குகின்றது. நுகர்வு உருவாக்கும் "பொய்மையான உணர்வு", மனிதனின் அனைத்து சமூக உணர்வுகளையும் நலமடித்து விடுகின்றது.

தனிவுடமையா அல்லது சமூகவுடமையா என்ற அடிப்படையான முரண் சார்ந்து மக்கள் வர்க்க ரீதியாக நேர் எதிராக மாற்றுவதாகவும், விதவிதமானதைத் தேடி அலைவதாகவும் மாறிவிடுகின்றது. மனித உளவியல் வக்கிரம் பெற்று, வரைமுறை நுகர்வுக்குள் மகிழ்ச்சி தேடி அலைய வைக்கின்றது. மகிழ்ச்சிக்கான மையமாக இருக்கும் சமூக உணர்வாக்கத்தை, தனிவுடமையை அடிப்படையாக கொண்ட சந்தைக் கலாச்சாரம் அழித்துவிடுகின்றது.

இதன் விளைவு பாலியல் நடத்தை என்பது வரைமுறையற்ற நுகர்வு வெறியாகிவிடுகின்றது. குடும்பம் சார்ந்த தன் வாழ்க்கைத் துணைக்குள்ளான பாலியல் தெரிவுடன், தங்கள் பாலியல் வாழ்க்கையை வரையறுத்துக் கொள்வதை நுகர்வாக்கம் மறுதளித்து விடுகின்றது. சமூக தன்மையற்றதும், வரைமுறையற்றதுமான, தனிமனிதனின் நடத்தையாக பாலியல் குறுகி விடுகின்றது. சமூகத்தன்மையற்ற தனிவுடமையிலான நுகர்வை முதன்மையாகக் கொண்ட இரண்டு மனிதர்களின் பாலியல் நடத்தை நலமடிக்கின்றது. வரைமுறையற்ற பாலியல் நடத்தையில், மகிழ்ச்சி என்பது போலியாகி அதுவே நடிப்பாகி விடுகின்றது.

சமூக உறவுகளின் சிதைவுகள் தான், தனிவுடமையின் ஊக்க மருந்துகளாகும். முரண் என்பது இயற்கை சார்ந்த பரிணாமச் சூழலில் சமூகமாக வாழத் துடிக்கின்ற தன்மையே, இயற்கையான சமூகத்தன்மை கொண்ட பாலியலுக்கு ஏற்படும் சிதைவுகள், இணைந்து வாழ்வதற்குரிய சமூக உறவுகளையே சிதைத்து விடுகின்றது. சந்தை என்பது பொருளை மட்டுமல்ல, பாலியலையும் கூட நுகர்வுக்குரிய சந்தைப் பொருளாக்கியுள்ளது.

சந்தை உருவாக்கும் நுகர்வு விளம்பரக் கலாச்சாரம், தன் பொருளை மட்டும் நுகரக் கோரவில்லை. மாறாக பெண்ணையும் சேர்த்து நுகரக் கோருகின்றது. சந்தை விளம்பரங்கள் பெண்ணை நுகர்வுக்குரிய பொருளாக முன்னிறுத்துகின்றது.

சுதந்திரம் இழந்தாள். தனிவுடமையிலான நிலப்பிரபுத்துவ அமைப்பில் பெண்ணின் உழைப்பு பெறுமதியற்றதான போது, பெண் அடிமையாக்கப்பட்டாள். இந்த குடும்ப அமைப்பில் பெண்ணின் பாலியல் நடத்தை என்பது, இயற்கையின் இணைக்கமான சமூக செயற்பாடாக அல்லாமல், ஆணின் மேலாதிக்கம் சார்ந்ததாக மாறியது. ஆணின் விரும்பமும் தெரிவுமே, பெண் மீதான பாலியல் நடத்தையானது.

பெண் சமூகத்தில் உறுப்பாக அல்லாது ஆணைச் சார்ந்து வாழ்கின்றதான, அடிமையின் செயலானது. ஆண் கொண்டிருந்த தனிவுடமைக்கு உட்பட்டவளே பெண். இது தான் நிலப்பிரபுத்துவ சமூக அமைபில் பெண்ணின் பாத்திரம்.

தனிவுடமையிலான முதலாளித்துவ பொருளாதார சமூகக் கட்டமைப்பு, பெண்ணின் உழைப்பைக் கோரியது.

15 ஆம் பக்கம் பார்க்க...



# புலம்பெயர் சமூகமும் அதன் பொருளாதார கலாச்சார அடிப்படைகளும்

இலங்கையிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து அந்தந்த நாடுகளில் அகதித் தஞ்சம் பெற்று காலப்போக்கில் அந்தந்த நாடுகளின் குடியுரிமை பெற்றுக்கொண்ட பிரஜைகளாக பலர் இன்று இருக்கின்றனர். அதேவேளை கணிசமானவர்கள் அகதி அஸ்தந்து நிராகரிக்கப்பட்டு தத்தளித்த வாழ்க்கைக்குள் அகப்பட்டு, எந்த உத்தரவாதமுமில்லாத தமது நிலைமைகளுக்கு எதிராக குடிவரவுச் சட்டத்தின் கண்களுக்கு மறைந்து வாழ்ந்து போராடியபடியும் இருக்கிறார்கள்.

அகதிகளாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்திருந்தாலும் பெரும்பான்மையானவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் விமானமேறி புலம்பெயர்ந்தனர். அயல்நாடான இந்தியாவுக்கு உயிராபத்தான அலையெறியும் கடல்வழியைக படகேறிக் கடந்தும் பலர் அகதிகளாக அங்கு சென்றடைந்தனர்.

போரின் இடர்ப்பாடுகளால் இடம்பெயர்ந்தது தான் பெரும்பான்மையான முதலாவது தலைமுறை. தனது நாடு, மொழி, கலாச்சாரம், குடும்பம், சுற்றம், நட்பு, வாழ்ந்த புவியியல் சூழல், காலநிலை எல்லாவற்றையும் சொந்த நாட்டை விட்டுப் பிரிந்து வந்ததனால் துாரத்தில் தொலைத்துவிட்டு இன்னுமொரு அந்நிய தேசம், அறியாத மொழி, புரிந்துகொள்ள முடியாத பண்பு, கலாச்சாரம் என்பனவற்றுக்கு இந்த முதல் தலைமுறை முகம் கொடுத்தது. எந்தக் கடினமான நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சளைக்காமல் தனது உழைப்பினை பணமாக்கி தனது இருப்பை பேணிக் கொண்ட அதேவேளை அந்தந்த நாட்டு பூர்வீக மக்களுடனான மொழி, கலாச்சார, வர்க்க ஒட்டுறவில்லாத ஒரு வாழ்வுக்குள் தன்னை இருத்திக் கொண்டது.

1. தொடர்பாடவும், கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகளை புரிந்து கொள்ள முடியாதபடியும் முற்றிலும் புதிய மொழி ஆளுமை போதாமை.

2. கல்வி, வேலைவாய்ப்பு, குடியுரிமை அந்தந்த நாட்டில் கிடைக்குமா என்ற நிச்சயமற்ற எதிர்காலம். அந்தந்த நாட்டிலேயே தனது வாழ்க்கை நிரந்தரமா அல்லது தற்காலிகமானதா என்று கழிந்து சென்ற நிச்சயமற்ற பல வருடங்கள். அதனால் எப்பேர்ப்பட்ட சமூக கலாச்சார வாழ்க்கையில் ஊன்றி நிற்பது என்பதில் ஊசலாடிய மனநிலை.

3. தான் பிறந்து வளர்ந்து கடைப்பிடித்த கலாச்சாரம், அது சாதி, மத, பெண்ணொடுக்குமுறை கொண்ட நிலப்பிரபுத்துவ கலாச்சாரமாயிருந்தும் அதுவே சிறந்தது என முதலாளித்துவம் வளர்ச்சியுற்ற இவ்வாறான சாதி மத பெண்ணொடுக்குமுறைகளைப் பண்பாடுகளை சமூக நியாயமெனக் கொள்ளாத நாடுகளிலும் இறுக்கமாகப் பேணுவதில் முனைப்புடன் நின்றது.

4. இலங்கையில் ஏற்பட்ட போர் வெற்றிகள் புலம்பெயர் நாட்டில் ஏற்படுத்திய மனோரீதியான இனவுணர்வுப் பெருமிதங்கள்.

5. பெண்களின் மேலான கலாச்சார ஒடுக்குமுறைகளைக் கூட கைவிடுவதற்குப்பதிலாக, போராட்டக் களங்களில் பெண்களுக்கென்றான பிற்போக்கான கலாச்சார கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து ஆண்களுக்கு நிகரான போராளிகளாக பெண்கள் மாறியிருந்த போதிலும் அதனைப் போற்றிய புலம்பெயர் சமூகமோ, தான் காவி வந்த பிற்போக்குப் பழமைவாத(நிலப்பிரபுத்துவ) கலாச்சாரக் கூறுகளை தமது பெண் குழந்தைகள் மீது திணித்தமை.

6. புறக்காரணிகளான, உள்நாட்டு மக்களினது புதிதாக குடிவந்த பிறநாட்டவர்களுக்கெதிரான நிறவெறி மற்றும் அவர்களது அந்நியமான கலாச்சார பண்புகளின் மேலான வெறுப்பும் அச்சமும்.

7. மறுபக்கத்தில் தாம் குடிவந்திருக்கும் நாட்டவர்களின் கலாச்சாரத்தின் மீது புலம்பெயர்ந்தவர்களுக்கு இருக்கும் தப்பான கண்மூடித்தனமாக அபிப்பிராயமும், வெறுப்பும் அச்சமும்.

8. பயங்கரவாதப் பிரச்சாரத்திற்குள் எடுபட்டுப்போய் மேற்குலக வெள்ளையினமல்லாத குடிவரவு மக்கள் மேல் உருவாக்கப்பட்ட உள்நாட்டு மக்களின் நம்பிக்கையீனம் மற்றும் அந்த குடிவரவு மக்கள் எதிர்கொண்ட இன்னோரன்ன நெருக்கடிகள்.

இந்தப் பின்னணிகளோடு வேறும் காரணிகளையும் சேர்த்து குடிவந்த மக்களின் தற்போதைய இருப்பு ஆராயப்படல் வேண்டும்.

எப்போதும் ஒரு சமூகத்தினது கலாச்சார பண்பாட்டுக் கூறுகள் அச் சமூகத்திலுள்ள உற்பத்திமுறை உறவுகளாலேயே தீர்மானிக்கப்படுகிறது. நிலவுடமை உற்பத்திமுறை, நிலவுடமைச் சமூகத்தில் நிலவுடமைக் கலாச்சாரத்தினை தோற்றுவிக்கும். நிலவிய நிலவுடைமை உற்பத்திமுறையை துாக்கியெறிந்த முதலாளித்துவ உற்பத்திமுறை, முதலாளித்துவ கலாச்சாரத்தை தோற்றுவிக்கும். அந்தந்த சமூகப் பொருளாதார உற்பத்திமுறைக்கேற்ப கலாச்சார மாற்றமும் நிகழ்ந்தேயாக வேண்டும். முதலாளித்துவ உற்பத்திமுறைக்கு முரணானவற்றை நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் கொண்டிருப்பதால் முதலாளித்துவ உற்பத்திமுறை நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தை தகர்த்து தனது உற்பத்திமுறைக்குகந்த கலாச்சாரத்தை பிறப்பிக்கும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை முதலாளித்துவ உற்பத்திமுறைமை என்பது ( முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெறவில்லை) வீறுபெற்று எல்லாவற்றையும் புரட்டிப் போடவில்லை. அதனால் நிலப்பிரபுத்துவம் இன்னும் அதன் அடியோடு வீழ்த்தப்படவில்லை. நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் தனது அடித்தளத்தை முற்றிலும் இழந்து போகாமல் பலமான அதன் தாக்கத்தை சமூகத்தில் நிலைநிறுத்தி வைத்துள்ளது. இவைகளே சாதிய, மத, பெண்ணொடுக்குமுறைக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ள நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தினைப் பற்றி நின்று, புலம்பெயர்ந்த சமூகம் தான் தற்போது வாழும் முதலாளித்துவ நாடுகளிலும் கலாச்சாரத்தின் வழி பின்னடைந்து நிற்க அடிப்படையானது.

முதலாளித்துவ முதிர்ச்சியினால் அதன் தொடர்ந்த வளர்ச்சி வீச்சினால் சாய்க்கப்படாமல் இருக்கும் (நிலப்பிரபுத்துவ) பிற்போக்கு கலாச்சார வாழ்பரப்பிலிருந்து முளைவிட்டு வளர்ந்து, சடுதியில் முதலாளித்துவ பொருளாதார சமூக அடிக்கட்டுமானத்தைக் கொண்ட, (நிலப்பிரபுத்துவ) பிற்போக்கு கலாச்சாரக் கூறுகளை இல்லாதொழித்து வேறொன்றாகப் புரட்டிப் போட்டிருக்கும் நாடுகளின் கலாச்சாரத்திற்குள் வேரோடு பிடுங்கிப் போடப்பட்டிருக்கும் புலம்பெயர் சமூகம், தனக்குள்ளேயே தான் காவி வந்த கலாச்சாரச் சுவருக்குள்ளேயே வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டது.

இந்த முதல் தலைமுறை தனது வாழ்க்கையை, தான் புலம்பெயர்ந்து வந்த நாட்டில் ஏதோ கொண்டிழுத்தது என்றே கூறமுடியும். எப்போதும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற நிச்சயமற்ற கலக்கமான வாழ்வை அது பல வருடங்கள் கடக்க வேண்டியிருந்ததால் உறுதிபட ஒரு பிணைப்பை எதிலும் ஏற்படுத்த முடியாத நிலை அதற்கிருந்தது என்பதையும் கணக்கில் எடுத்தாலும், கனடா போன்ற நாடுகளில் பெரும் எண்ணிக்கையில் குடிவரவு ஏற்றுக்கொள்ளப்படும் என்றவொரு நிச்சயமான நிலைகளில் வாழும் தமிழ் சமூகம் நிலவுடமைச் பிற்போக்குச் கலாச்சாரப் பிணைப்புகளிலிருந்து, சிந்தனைக்குள்ளிருந்து தன்னை மீட்கவில்லை. சாதிய மத இன கோட்டுக்குள் கட்டுண்டு கிடக்கிறது. தான் வாழும் தற்போதைய சமூகத்தில் ஆகக் குறைந்தது பெண்கள் மீதான ஒடுக்குமுறையை சாதியையாவது கைவிடுவதாயில்லை. போஷித்து பேணுகிறது.

மனித தற்போது தனக்கு அடுத்ததான தனது தலைமுறையை புலம்பெயர் நாடுகளில் தனது சந்ததியாக உருவாக்கியிருக்கிறது.

ஆனாலும் இந்தப் புலம் பெயர்ந்து உழைக்கும் சமூகம் சில நாடுகளில் எதிர்கொண்ட விடயங்கள் மிகவும் கடினமானவை.

அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் கனவுடன், அவர்கள் நாடு விட்டு நாடு வந்து பிழைக்க முனைகின்றனர். அன்னிய நாடுகளிலோ உழைப்பு அடிமைகளாகவும், கொத்தடிமைகளாகவும் மாற்றப்படுகின்றனர். அங்கு எந்த உரிமைகளுமற்ற நடைப்பிணமாகி விடுகின்றனர். புலம் பெயர்ந்து உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில், பெண்கள் தங்கள் குழந்தைகளைக் கூட அநாதரவாக விட்டு விட்டுச் செல்லுகின்றனர். தங்கள் வாழ்க்கைத் துணைகளையும், உறவுகளையும் கூட, வருடக் கணக்கில் பிரிந்து விடுகின்ற, பல இலட்சம் மக்களின் அவலங்கள் சொல்லிமாளாது. வாழ்க்கைக் கனவுகள் சிதைய, அவலங்களும் மன உழைச்சல்களும் வாழ்க்கையாகிவிடுகின்றது. புலம் பெயர்ந்து உழைக்கும் மக்களின் பொது அவலங்களில் இவைகளும் அடங்கும்.

முதல்தலைமுறையின் வழி, தான் குடிவந்த நாட்டு மக்களுடனான வாழ்க்கைக்குள்ளேயும் கலாச்சாரத்துக்குள்ளேயும், முதல்தலைமுறை விரும்பியோ விரும்பாமலோ, கரைந்து போய்விடப் போகின்றதே இரண்டாவது தலைமுறையும், அதற்குப்பிற்பட்ட தலைமுறைகளும். இந்த இரண்டாவது தலைமுறைக்குள் கலாச்சார பண்பாட்டில் தாக்கத்தை முதல்தலைமுறை, தன்னில் தங்கி வாழும் குழந்தை மற்றும் இளம்பருவ காலத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அதேயளவு தாக்கத்தினால் இந்த இரண்டாவது தலைமுறை தன்னுடைய வாழும் சூழலில் கல்விக்கூடம், அந்நந்த நாட்டு பூர்வீக சமவயதுடையவர்களுடான பரந்த நட்புவட்டம் போன்றவற்றால், அந்தந்த நாட்டு கலாச்சாரத்துக்குள் முற்றுமுழுதாக கரைந்து போகாவிட்டாலும், பரிச்சயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் அல்லது கலாச்சார மற்றும் வாழ்வியல் மாற்றத்துக்காய் பெற்றோரோடு முரண் கொண்டவர்களாய் சிலர் மாறியிருக்கிறார்கள்.

இலங்கையின் போர்ச் சூழல் என்பது இந்த இளம் தலைமுறையின் கவனத்தையும் ஈர்ப்பையும் ஒரு அலை எழுச்சியாக அவர்களிடத்தில் ஏற்படுத்தி வைத்தது. அதனால் அவர்களுக்கு ஊட்டப்பட்ட இலங்கைச் சமூகம் பற்றிய அறிவு என்பது இந்தப் போரில் இராணுவ வெற்றிகளால் பலத்தினைப் பெற்று ஆதிக்கம் பெற்ற அமைப்பினுாடு வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளால் நிரப்பப்பட்டது என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கையின் 66வது சுதந்திர தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்த 66 வருடங்களை திரும்பிப் பார்போமானால் இந்த நாட்டின் சகல மக்களிற்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டு அவர்கள் ஆளும் வர்க்கத்தால் தொடர்ச்சியான அடக்குமுறைக்கு உள்ளாகி வருவதனையே காணலாம். இந்த நாட்டின் தொழிலாள வர்க்கம் தனது அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட பாரிய போராட்டங்களை முன்னெடுத்திருப்பதனையும் நாட்டிற்கு அந்நிய வருவாயினை ஈட்டித்தந்து கொண்டிருக்கும் மலையக மக்கள் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டதனையும் அரசியல்வாதிகளால் இனவாதம் வளர்க்கப்பட்டு பல இனக்கலவரங்கள் இடம்பெற்றுள்ளதனையும் திட்டமிடப்பட்டு சிறுபான்மை இன மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டு வந்துள்ளதனையும் காண்கின்றோம். இதனால் நாடு எப்போதும் அமைதியின்றி போராட்ட களமாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

மேலும் மூன்று ஆயுதப் போராட்டங்கள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக இடம்பெற்றுள்ளது. இரு தடவைகள் பெரும்பான்மை இனத்தின் இளைஞர்களினாலும் முப்பது வருடங்களிற்கு மேலாக தமிழ் இயக்கங்களினாலும் இந்த ஆயுதப் போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவை இலங்கை அரச படைகளாலும் இந்தியா அமெரிக்கா சீனா ரஸ்யா ஐரோப்பா நாடுகளின் உதவிகளுடன் முற்றாக அழித்தொழிக்கப்பட்டன.

இதனைத் தவிர வடக்கில் எழுபதுகளில் சாதிய கொடுமைகளிற்கு எதிரான உக்கிரமான போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சுதந்திரம் கிடைத்தது எனச் சொல்லப்படுகின்ற இந்த அறுபத்து ஆறு வருடங்களில் மக்கள் தங்களது அடிப்படை உரிமைக்கான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்திருப்பதனையும் இளைஞர்கள் யுவதிகள் மனித உரிமையாளர்கள் பத்திரிக்கையாளர்கள் அரசியலாளர்கள் சாதாரண பொதுமக்கள் என பல லட்சக்கணக்கானோர்கள் பலியாகியுள்ளதனையும் காண்கின்றோம். இது முடிவில்லாது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

மக்களது அடிப்படை உரிமைகளை மறுத்தவர்கள் யார்? மக்களை இன மத ரீதியான பிரித்து வைத்து மோத வைத்து லாபம் கண்டு கொண்டிருப்பவர்கள் யார்? வேறு யாருமல்ல இந்த நாட்டை மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கின்ற யுஎன்பி சிறீலங்கா சுதந்திரக் கட்சிகளும் இந்த கட்சிகளுடன் ஒட்டி உறவாடி தமது பிழைப்பினை மட்டுமே பார்த்துக்கொள்ளும் சிறுபான்மையினங்களை பிரதிநிதிப்படுத்தும் தரகு முதலாளித்துவ அரசியல் தலைமைகளும் கட்சிகளுமே!.

ஆக மொத்தத்தில் பார்போமேயானால் ஆளும் தரகு முதலாளித்துவ ஆட்சியாளர்களிற்கு எதிராக சிங்கள தமிழ் மலையக முஸ்லீம் மக்கள் இன ரீதியாக பிரிந்து நின்று போராட்டங்களை முன்னெடுத்தமையினால் போராட்டங்களை இலகுவாக அழித்தொழிக்க முடிந்தது. ஏல்லோருக்கும் பொது எதிரியாக இருக்கின்ற யுஎன்பியாலும் சுதந்திரக் கட்சியாலும் தொடர்ந்து மாறி மாறி ஆட்சியமைத்து தங்களை மேன்மேலும் செல்வந்தர்களாக்கவும் அந்நிய வல்லரசுகள் நாட்டை

# சுதந்திரம் கிடைத்ததாம்!



# உரிமை கிடைத்ததா? ஒடுக்குமுறை ஒழிந்ததா?

கொள்ளையிட அகலக் கதவினை திறந்து விட்டு நாட்டு மக்களை மேன் மேலும் வறுமைக்குள் தள்ளி விட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்று யுத்தம் இல்லை. ஆனால் வடகிழக்கில் இன்னமும் அறிவிக்கப்படாத யுத்தகால நிலைமையே நீடிக்கின்றது. பல மக்கள் தங்கள் வீடுகளிற்கு திரும்ப முடியாதவாறு அதிஉயர்பாதுகாப்பு வலயங்கள் என அவர்களது கிராமங்கள் அரசால் அபகரிக்கப்படுவதுடன் வன்னியில் வெளிநாட்டு நிறுவனங்களின் தேவைகளுக்கென பல லட்சம் ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே எனக் கேட்டு குரல் எழுப்பும் போதெல்லாம் அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. திட்டமிட்ட ராணுவ குடியிருப்புக்கள் அமைக்கப்படுகின்றன. புத்தர் சிலைகள் சந்து பொந்துகளில் எல்லாம் அமைக்கப்படுகின்றன.

புலிகளை இலங்கை அரசு வெற்றி கொள்ள தோளோடு தோள் கொடுத்து நின்ற இந்தியாவிற்கு வடக்கு சந்தை திறந்து விடப்பட்டுள்ளது. சீமெந்து சைபிக்கிள் ஸ்கூட்டர் முதல் பற்பொடி தீப்பெட்டி ஈறாக விற்பனை செய்ய இந்திய பெருமுதலாளிகளிற்கு புதிய சந்தை கிடைத்துள்ளதுடன் இந்திய பெரும் விவசாய பண்ணை நிறுவனங்கள் வன்னியில் வளமான நிலங்கள் நீண்டகால குத்தகைக்கு குறைந்த விலைக்கு பெற்றுள்ளதுடன் யுத்தத்தின் பின் சகலத்தையும் இழந்த மக்கள் கூலியாட்களாகவும் அமர்த்தும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

இந்த உண்மைகளை மறைத்து இந்திய முதலாளிகளின் நலன்களை மட்:டுமே உயர்த்திப் பிடிக்கின்ற இந்திய ஆட்சியாளர்கள் எமக்கு நீதியான தீர்வை பெற்றுத்தருவார்கள் என இன்னமும் எம்மக்களை நம்பும்படி தமிழ் மக்களின் தலைவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் எமது மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகிறார்கள்.

மறுபுறத்தில் சர்வதேசம் எமக்கு நீதி பெற்றுத்தரும் என புலம்பெயர்ந்த ஒரு கூட்டம் மக்களை போராடவிடாது திசைதிருப்பி சர்வதேசத்தின் நலன்களிற்காக தமிழ் மக்களை பலிக்கடாவாக்கி தாம் பிழைத்துக்கொள்ள நாக்கை தொங்கவிட்டு காத்துக் கிடக்கின்றது.

ஆனால் சர்வதேசமோ யுத்தத்தின் பின்னர் தனக்கு மட்டுமே இலங்கை நவதாராளவாத பொருளாதார முன்னெடுத்தலுக்கு வழிவிடாது சீனாவிற்கு கூடுதல் வழியினை திறந்து விட்டதற்கு எதிராகவும் தென்கிழக்காசியாவில் தனது ராணுவ நலன்களிற்கு எதிராக இலங்கை சீனாவிற்கு ராணுவ முக்கியத்துவம் மிக்க பல திட்டங்களிற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளதையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் இலங்கையினை தனது வழிக்கு கொண்டுவரும் முகமாக தமிழ் மக்களிற்கு வன்னியில் இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நியாயம் பெற்றுத் தருவது போல் நாடகமாடுகின்றது. சர்வதேசம் முன்வைக்கும் தீர்வுகளை பார்த்தலே தெரிகின்றது இங்கே ஒரு சதி அரசியல் நாடகம் நடக்கின்றது என்பது.

இந்தியா முதல் எம்மீது கருணை கொண்டுள்ள சர்வதேசம் அனைத்தும் இலங்கையில் தமிழ் மக்களின் தீராத இனப்பிரச்சினைக்கான தீர்வை பற்றி ஆக்கபூர்வமான எத்தகைய செயற்பாடும் கிடையாது. மாறாக தமிழர்களின் பிரச்சனை என்பது வன்னி யுத்தம் குறித்த இலங்கை அரசின் போர்க்குற்றச் செயல்களே என குறுக்கி அதன் பின்னால் தமிழ் மக்களை ஓட விட்டுள்ளன.

அன்று காலனித்துவத்தை முன்தள்ளிய போது ஒரு கையில் பைபிளையும் மறு கையில் ஆயுதத்தையும் கொண்டு தமது நேரடிக்கட்டுப்பாட்டில் நாடுகளை கைப்பற்றி ஆட்சி செய்தன பிரித்தானியாவும் பிரான்ஸ்சும். ஆனால் இன்று நவதாராளவாத பொருளாதாரத்தை முன்னெடுக்கும் போது உள்நாட்டு ஆளும் வர்க்கத்துடன் உடன்பாடு செய்து கொள்கின்றது. உள் நாட்டில் இருக்கும் முரண்பாடுகளிற்குள் தலையிடுவதில்லை. முரண்பாடுகளை மறைமுகமாக ஊக்குவித்து நாட்டு மக்களை அவர்களிற்குள் இன மத ரீதியாக மோத விடுவதன் மூலம் தமது கொள்ளைக்கு எதிராக மக்கள் ஒன்றிணையா வண்ணம் பார்த்துக் கொள்கின்றது. இதையும் மீறி மக்கள் அரசிற்கு எதிராக கிளர்ந்தெழுந்தால் தாம் மக்கள் பக்கம் இருப்பது போல வேடமிட்டு தமது கொள்ளைக்கு துணை போகக் கூடிய இன்னொருவரை மாற்றீடாக கொண்டு வந்து மக்கள் போராட்டங்களை மழுங்கடிக்கின்றன. இதனை நாம் இன்று அரபு நாடுகளில் அரவு வசந்தம் ஊடாக காண்கின்றோம்.

எங்களது கடந்த பல பத்தாண்டு சொந்த அனுபவங்களினூடாக சர்வதேசம் என்பது என்ன அது என்ன விதமாக நடந்து கொள்ளும் எப்படி எங்களை நட்டாற்றில் விடும் என்பதனை நன்கு புரிந்து கொண்டுள்ளோம்.

மறுபுறத்தில் இலங்கையில் இடம்பெற்ற மூன்று ஆயுதப் போராட்டங்கள் அழிக்கப்பட்டிருப்பினும் அவை தோன்றியமைக்கான அரசியல் காரணிகளிற்க்கான தீர்வுகள் ஏதும் இன்று வரை காணப்படாமல் அவை மேன்மேலும் சிக்கலான நிலைமைகளுக்குள் ஆட்சியாளர்களினால் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த அரசியல் காரணிகளை தீர்க்க நாம் கடந்த காலத்தில் பயணித்த பாதைகள் யாவும் வெற்றியளிக்கவில்லை. எனவே நாம் எமது கடந்தகால அரசியல் பாதைகளை துறந்து புதிய வழிவகைகளை தேடியாக வேண்டும்.

சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களை இன மத ரீதியாக பிரித்து மோதல்களை உண்டு பண்ணி தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தை தமது கையில் வைத்திருக்கின்ற ஆளும் தரகு முதலாளித்துவ ஆட்சியாளர்களிற்கு எதிராக இனவாத்தை முறியடிக்கும் இன ஒற்றுமையினை முன்வைத்து ஒடுக்கப்பட்ட அனைத்து இன மக்களும் ஒன்றினைந்து போரடுவதே ஒடுக்கப்பட்ட அனைத்து மக்கள் முன்னால் உள்ள ஒரே ஒரு தெரிவாகும்.

# களனி பல்கலைக் கழக மாணவிகள் வி

# "கென்டினில்" நித்திரை

களனி பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் 300 மாணவிகள் விடுதி வசதிகள் கேட்டு மாணவர் நிலையத்தின் உணவுச்சாலையில் (ஜிம் கென்டீன்) இரண்டு வாரங்களாக தங்கியிருக்கின்றனர். உணவுச்சாலையின் தரையில் பாய்களையும பத்திரிகைத்தாள்களையும் விரித்து நாய்களும் பூனைகளும் நடமாடும் இடத்தில் படுத்து, இரவில் நித்திரை செய்வதற்கும் தன்பாட்டில் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கும் விடுதி கேட்டு போராட்டம் நடத்துகிறார்கள்.

தொடுவானத்திற்கு அப்பாலுள்ள உலகை பார்ப்பதற்காக பிள்ளைகளை வளர்த்து, ஆசியாவின் அறிவுக் களஞ்சியமாக இலங்கையை உருவாக்குவதாக மார்தட்டி, தேச மைந்தர்களின் பெருமைக்குறிய தந்தையென உளறிக் கொட்டும் நிலையில், களனி பல்கலைக் கழக மாணவிகள் இரவில் நிம்மதியாக நித்திரை செய்வதற்கு இடமில்லாமல் உணவுச்சாலையில உறக்கம் கொள்கின்றனர். எத்தனையோ கடிதங்களை எழுதி அதிகாரிகளுக்கு அறியத் தருகின்றனர். கொதிக்கும வெய்யிலில் நின்று கோஷ ங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நடை








பயணம் செல்கின்றனர். இவற்றையெல்லாம் கண்டும் காணாததுபோல் இருக்கும் உப வேந்தர் இரண்டு புதிய கார்களை வாங்குகிறார். வாகனம் நிறுத்துவதற்காக இடத்தை அமைக்கிறார். வெளிநாட்டு பயணம் செல்கிறார். இதற்கிடையில் அரசாங்கம், பலதரப்பட்ட பிரச்சாரங்களின் மூலம் அபிவிருத்தியின் அற்புதங்களைப்பற்றி மாயாஜால கதைகளை கூறுகிறது. களனி பல்கலைக் கழகத்தில் கடந்த சில வருடங்களாக விடுதி வசதி சம்பந்தமாக பாரிய போராட்டம் நடந்தது. இந்த கல்வி வருடத்தின் ஆரம்பத்திலேயே 300 மாணவிகளுக்கு விடுதி வசதி கிடைக்காமல் போனமை பல வருடங்களாக நீடித்திருந்த நெருக்கடியின் தற்போதைய வெளிப்பாடாகும்.

கல்வி சம்பந்தமாக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவிருக்கும் நவ தாராளமய முதலாளித்துவ மறுசீரமைப்புகளுக்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்ந்து போராடி வருவதோடு, அவற்றை தோற்கடிப்பதன் மூலம் மாணவர் அமைப்பு, முன்னைய மற்றும் தற்போதைய அரசாங்கங்களுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வற்புறுத்தல் குழுவாக ஆகியிருக்கிறது. ஆகவே, மாணவர்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களை குறைத்து மாணவர்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தியும் அரச அடக்குமுறையை தொடுத்து மாணவர் அமைப்பை அடக்கி ஒடுக்குவதற்கும், பலவீனப்படுத்துவதற்கும் ஆளுவோர் பல்வேறு முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

அவ்வாறான ஒரு முயற்சிதான் பல்கலைக் கழக வளவிற்குள் இருக்கும் ஆண்களுக்கான விடுதிகளை வெளியில் கொண்டு செல்வதை குறிப்பிட முடியும். ஆண்களுக்கான உள்ளக விடுதியிலுள்ள மாணவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு பிரச்சிணையிலும் ஒரேயடியாக முன்வருவதோடு, அது பல்கலைக் கழக நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் பெரிய தொந்தரவாகும். ஆகவே, ருஹுணு பல்கலைக் கழகத்திலும், களனி பல்கலைக்கழத்திலும் இது பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இவ்வாறு களனி பல்கலைக் கழகத்தின் உள்ளக விடுதிகளில் இருந்த மாணவர்களை வெளியிலுள்ள விடுதிகளுக்கு மாற்ற வேண்டிய நிலை 2010ல் உருவானது. உள்ளக விடுதியில் 400 மாணவர்கள் மாத்திரமே தங்கியிருக்க முடியும். வெளியிலுள்ள பெண்கள் விடுதிகளில் ஆகக் கூடியது 1200 மாணவிகள் மாத்திரமே தங்க முடியும். இந்த தான்தோன்றித்தனமான மாற்றத்தினால் வெளி விடுதியில் தங்கியிருந்த 1200 மாணவிகள், 400 பேர் தங்கக் கூடிய உள்ளக ஆண்கள் விடுதிக்கு மாற்றப்பட்டதன் பினனர் மேலதிகமான 800 மாணவிகளுக்கு 2010ல் விடுதி வசதி கிடைக்கவில்லை. அப்போது ஏற்பட்ட மாணவர் போராட்டங்கள், மாணவர் தலைவர்களுக்கு வகுப்புத்தடை விதித்தும், மாணவிகளுக்கு ஒழுக்காற்று விசாரணை நடத்தி விடுதிகளை மூடியும் அடக்கப்பட்டன.

பல்கலைக் கழகத்திற்கு வெளியிலுள்ள விடுதிக்கு ஊருக்கு நடுவில் 1.5 கி.மீட்டர் தூரம் மாணவர்கள் நடந்து செல்ல நேர்ந்துள்ளது. அது பெண்களுக்கான விடுதியாக இருந்த காலத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களின் பலனாக, பல்கலைக்கழக நிர்வாகமும் போக்குவரத்துச் சபை டிப்போவும் இணைந்து விடுதியிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு பஸ் போக்குவரத்தொன்றை ஏற்பாடு செய்திருந்தன. ஆனால் ஆண்களுக்கான விடுதியாக மாற்றப்பட்டதன் பின்னர் விடுதிக்கு நடைப் பயணமாக சென்ற மாணவர்கள் அரசாங்க காடையர்களின் தாக்குதல்களுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படியாக ஒருமாணவரின் தலையில் விழுந்த தாக்குதலால் அந்த மாணவர் இன்றுவரை மனநோயாளிக உள்ளார். இன்னொரு மாணவரின் காது கேட்பதில்லை. பெருமளவான மாணவர்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர். இது சம்பந்தமாக பொலிஸ் மற்றும் பல்கலைக் கழக பாதுகாப்பு பிரிவுகளுக்கு முறையிட்டபோதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

மாணவர் தலைவர்களை இலக்காகக் கொண்டு பாதுகாப்புப் பிரிவினர் நடத்தும் தாக்குதல்களும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. களனி பல்கலைக் கழகத்தின் மஹா சிஷ்ய சங்கத்தின் முன்னாள் தலைவர் தோழர் ஜானக பண்டார, முன்னாள் தலைவர்களில் ஒருவரான தோழர் சுரஞ்சித் பண்டார ஆகியோரும் தாக்குதலுக்குள்ளாயினர். அதேபோன்று சில வாரங்களுக்கு முன்னர் கறுப்பு கண்ணாடி பொருத்தப்பட்ட ஒரு வேன் தற்போதைய தலைவர் தோழர் கிங்ஸ்லி குணரத்தினவின் பின்னால் விரட்டி வந்து அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்தபோதிலும் அது நகைப்புக்கிடமாக உள்ளது. கடந்த வருடம் நடந்த அவ்வாறான சம்பவம் குறித்து முறையிடச் சென்ற வேளையில் கிரபத்கொட பொலிஸ ார் முறைப்பாட்டை பதிவு செய்ய மறுத்துள்ளனர். விடுதி அமைந்திருக்கும் பகுதி ஓடைக்கு மேற்பக்கமாக இருப்பதால் அப்பிரதேசம் பேலியகொட பொலிஸின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசமாகுமெனவும் அங்கு சென்று முறையிடுமாறும் கூறப்பட்டுள்ளது. ஆனால், தாக்குதல் சம்பவம் ஓடைக்கு

கீழ்பக்கமாக நடந்துள்ளதால் கிரிபத்கொடை பொலிஸில் முறையிடுமாறு பேலியகொட பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த அனைத்து சம்பவங்களுக்கு மத்தியிலும் கடந்த வருடம் வெளியில் அமைந்துள்ள குறித்த விடுதி காடையர்களால் தாக்கப்பட்டதுடன், மாணவர்களின் உயிருக்கு பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்குமாறு கோரி மாணவர்கள் நடத்திய போராட்டம் 23 மாணவர்கள் மீது வழக்குத் தொடுத்தும், நீதிமன்ற உத்தரவுப்படி ஆர்ப்பாட்டக்களை தடை செய்தும் தடுக்குப்பட்டது.

அந்த விடுதி சம்பந்தமான நெருக்கடியின் தற்போதைண வடிவமாக மாணவர்கள் இது குறித்து நன்றாகவே அறிவார்கள். உணவுச்சாயில் ஒரு வேளை சாப்பாட்டின் விலை 40 ரூபாய். போட்டோ பிரதி புத்தகங்கள் மற்றும் பஸ் கட்டணங்கள் போன்ற ஏனைய செலவீனங்களை பார்க்கும்போது மாதாந்த செலவு அன்னளவாக 10000 ரூபாயாகும். விடுதிகள் கிடைக்காத மாணவர்கள் வெளியிலுள்ள தங்குமிடத்திற்கு 2000 ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையை செலுத்த வேண்டும்.

இந்த நிலைமையின் கீழ் இலவசக் கல்வியை பெறுவதற்காக பல்கலைக் கழகத்திற்கு வரும் மாணவர்கள் கல்வி கற்பதை ஒரு புறம் வைத்துவிட்டு வாழ்வதற்காக தொழில் செய்யத் துவங்கியுள்ளனர். இப்படியான சூழலில்தான் சந்திகள் தோறும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதிலிருந்து இரவுநேர காவல் வேலை, உணவகங்களில் வேலை போன்றவையோடு விபச்சாரத் தொழில்வரை மாணவர்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் பல்கலைக் கழகங்களுக்குள் 80 வீதம் விரிவுரைகளுக்கு சமுகமளிக்காதவிடத்து பரீட்சை எழுத அனுமதிப்பதில்லை. கல்வியை மேற்கொள்ளத்தக்க

# டுதி கேட்டு




300 மாணவிகளுக்கும் மேற்பட்ட தொகையினருக்கு விடுதி வசதிகள் கிடைக்காததோடு, மதவாச்சி, அநுராதபுரம், திருகோணமலை, ஹம்பந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவிகளும் அதில் அடங்குகின்றனர். பல்கலைக் கழக நிர்வாகம் இதற்கு அற்புதமான பதிலை கொடுத்திருக்கிறது. இம்முறை விடுதி வசதிகள் வழங்குவதற்குபோது பல்கலைக் கழகத்திற்கும் வீட்டுக்குமிடையிலான தூரத்தை கணக்கிலெடுக்காது வருமானத்தை பொருத்துதான் விடுதி வழங்கப்படுமாம். வருடாந்த குடும்ப வருமானம் 48000 ரூபாவுக்குக் குறைந்த வருமானமுடைய மாணவர்களுக்கு மாத்திரம் விடுதிகள் வழங்கப்பட்டுள்ளது. வருடாந்த வருமானம் 48000க்கு குறைந்த குடும்பம், அதாவது மாதாந்த வருமானம் 4000 ரூபாய் மட்டுமே பெறும் குடும்பம் வாழ்வது எப்படி?

இப்படியான நகைச்சுவைகளை ஆட்சியாளர்கள் அடிக்கடி அவிழ்த்து விடுகின்றனர். மாதம் 2500 ரூபாயைக் கொண்டு வாழ முடியுமென கல்வி அமைச்சர் சமீபத்தில் அவிழ்த்து விட்டது இப்படியா நகைச்சுவைதான். 2500 ரூபாய் மஹபொல புலமைப்பரிசில் அல்லது 2000 ரூபாய் மாணவர் உதவிநிதி பெறும் நிலையில் மாணவர்கள் இல்லை. கல்வி கற்பதற்காகவும் மூவேளை உணவு உண்ண வேண்டும். அனைத்து செலவுகளோடு தங்குமிட செலவுகளையும் சேர்த்து பார்க்கும்போது தொழிலொன்றை தேடிக்கொள்வதைத் தவிர மாணவர்களுக்கு மாற்றுவழி கிடையாது. பல்கலைக் கழகத்திற்கு வருவதற்கு முன்னர் பல்கலைக் கழகங்களைப் பற்றி கேள்விப்பட்டிருந்த கதைகளில் கருத்தாடல் நிறைந்த, அறிவுசார், தீவிரப்போக்குடைய மாணவருக்கு பதிலாக இப்போது, தொழில் செய்யும், யாரிடமிருந்தாவது பெற்றுக் கொண்ட போட்டோ பிரதி குறிப்புக்களை பாடம் செய்து சித்தியடையும் மாணவர்கள்தான் இருக்கிறார்கள்.

இவற்றுக்கு மத்தியில் பல்கலைக் கழக மாணவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு வாழ்க்கை மறுக்கப்பட்டுள்ளது. என்ன செய்வது, எங்கே போவது என்று தெரியாமல் தட்டுத்தடுமாறி நிற்கின்றனர். உணவுச்சாலையில் தங்கி 300 மாணவிகள் நிர்வாகிளிடம் கேட்பது நிம்மதியாக உறங்குவதற்கு விடுதிகள் மாத்திரமல்ல பல்கலைக் கழக வாழ்க்கையையும்தான்.

## `ன்சனீ ஜயசிங்க் இரண்டாம் வருடம்



நாங்கள் கென்டினுக்கு வந்து இரண்டு வாரங்களுக்கும் மேல். நான் திருகோணமலையை சேர்ந்தவர். எனக்கும் விடுதி இல்லை. இந்த கல்வி வருடம் ஆரம்பமானதிலிருந்து விடுதி கேட்டு மன்றாடினோம். என்றாலும் இந்தப் பிரச்சினைக்கு நிர்வாகத்திடம் பதில் இல்லை. தங்குமிடங்களை தேடிக்கொள்ளுமாறு அவர்கள் கூறுகிறார்கள். இநத விடுதிப் பிரச்சினையை உருவாக்கியதும் அவர்கள்தான். எங்களது குழு தங்கியிருக்கும் விடுதி அறையில் 30 மாணவிகள் இருக்கின்றனர். ஹொஸ்டலில் 13 அறைகள் மாத்திரமே உள்ளன. அதற்குள் மூச்சுவிடவும் முடியாது. பெரும்பாலானவர்களுக்கு ஹொஸ்டல் கிடைக்கவில்லை. தங்குமிடங்களுக்கு செலுத்த பணமும் இல்லை. எமது பெற்றோர் மிகவும் வறியவர்கள். நாங்கள் கேட்பது இரவில் நித்திரை கொள்ள, பாடமாக்குவதற்கு ஹோஸ்டல். உபவேந்தருக்கு கார் வாங்கவும், லிப்ட் ஒன்றை பொருத்திக் கொள்ளவும் பணம் இருக்கிறது. அரசாங்கம் அதிவேகப் பாதைகளை அமைக்கிறது. பல்கலைக் கழக மாணவர்கள் பாதையில் விழுந்து கிடக்கிறார்கள். நிம்மதியாக படிப்பதற்கு இடத்தை கேட்கிறார்கள். இதுதான் இந்த ஆட்சியாளர்களின் ஆச்சரியம். நாட்டின் பெரும்பாலான மக்கள் இந்த ஆச்சரியத்தைப் பார்த்து கண்களை அகல விரித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பல்கலைக் கழக மாணவர்கள். எமது உரிமைகளை வென்றெடுப்பது எப்படி என்பது எங்களுக்குத் தெரியும். எந்த அடக்குமுறை வந்தாலும், தடைபோட்டாலும் எமது போராட்டத்தை கைவிட மாட்டோம். ஆகவே, எமது பிரச்சினைக்கு தீர்வுமாறு ஆட்சியாளர்களை கேட்கின்றோம்.

## சாமலீ மதுபாஷினி இரண்டாம் வருடம்



4 அல்லது 3 வருடகாலம் தங்கியிருந்து கற்கும் பாடவிதானத்திற்கே நாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். பல்கலைக் கழகத்திற்கு வருவதற்கு முன்னர் இராணுவப் பயிற்சியின்போதும், முதலாம் வருடத்திலும் அரசாங்கமும், நிர்வாகமும் ஆச்சரியப்படத்தக்க வகையில் பரிவுடனேயே கதைத்தனர். இப்போது நாங்கள் நிர்க்கதியாக இருக்கும்போது பொறுப்புக்கூற யாருமே இல்லை. மஹபொல நிதியும், மாணவர் உதவி நிதியும் ஒரு மாத உணவுக்கே போதாது. தாய்மாரிடம் வாங்கி போடினுக்கு கொடுப்பது எப்படி? அவர்கள் மூன்று வேளை சாப்பாட்டுக்கே திண்டாடுகிறார்கள். மாதமொன்றுக்கு 4000 ரூபாய் வருமானமுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கே ஹொஸ்டல் தருவார்களாம். 4000 ரூபாய் வருமானம் பெறும் குடும்பம் வாழ்வது எப்படி? அப்படியான குடும்பங்கள் இருக்கின்றனவா, நாங்கள் முயல் குட்டிகளென நிர்வாகிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியாது. நாங்கள் இதற்கு சரியான தீர்வையே கேட்கிறோம். தீர்வை வழங்காமல் தேவையற்ற கதைகளை கூறுவதால் ஒன்றும் நடக்கப்போவதில்லை. பதில் கிடைக்கும்வரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை.

## யூ.என். நிரோஷகர் இரண்டாம் வருடம்



விடுதிப் பிரச்சினைக்கு தீர்வு கேட்டு அனுப்ப வேண்டிய அனைவருக்கும் கடிதம் அனுப்பினோம். சொல்ல வேண்டிய அனைவருக்கும் சொன்னோம். பதிலில்லை. செவிட்டு யானைக்கு வீணை வாசிப்பதைப் போன்றது. இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டிய தேவை நிர்வாகத்திற்கு இல்லை. அரசாங்கத்திற்கும் இல்லை. மாணவிகள் கென்டினின் தரையில் படுத்துறங்குகிறார்கள். இந்த நரகக்குழியில் இருந்து நாங்கள் கேட்பது எங்களுக்கு ஹொஸ்டலொன்றைத் தாருங்கள் என்று. தங்குமிடங்களை தேடிச் செல்ல எங்களுக்கு பணம் இல்லை. நாங்கள் கென்டினில் இருக்கும்போது எங்களுக்கு பாதுகாப்பு இல்லையென நிர்வாகம் கூறுகிறது. ஹொஸ்டல் இல்லாமல் நாங்கள் வீதிக்கு வீசப்பட்டமை குறித்து வாய் திறப்பதில்லை. எனவே ஹொஸ்டல் கிடைக்கும் வரை நாங்கள் இவ்விடத்தை விட்டு அகலப்போவதில்லை.

# முடிந்தால் வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி காட்டுங்கள்!

## பாதுகாப்பு அமைச்சின் நிதிஒதுக்கீட்டு விவாதத்தில் அஜித்குமார பா.உ ஆற்றிய உரையின் சுருக்கம்



வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தில்

உரையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தில் முழு வரவு செலவு திட்டத்தையும் பற்றி சிலவாத்தைகள் கூற முனைகின்றேன். விசேஷமாக முதலாளித்துவ ஆட்சியின் அடிப்டை கொள்கைதான் தமது எஜமானாகளுக்காக சேவைபுரிவது. முதலாளித்துவ இயந்திரமும் அரச இயந்திரமும் செயற்படுவதும், அரச இயந்திரத்தின் அடிப்படையில் இயங்கும் பாராளுமன்றம், நீதித்துறை ஆகியவை செயற்படுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. முதலாளித்துவ எஜமானர்களின் இலாபத்தை குறிக்கோளாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள்மீது சுமையேற்றுவதே தொடர்சியாக நடந்து வருகிறது. ஆட்சியாளர்கள் தேர்தல் நடாத்துவது, சட்டங்களை தயாரிப்பது, சட்டத்தை மீறுவது, நீதிபதிகளை நியமிப்பது, நீதிபதிகளை பதவி நீக்குவது, பொலிஸ் உயர் அதிகாரிளை நியமிப்பது, அவர்களை பதவி நீக்கம் செய்வது, யுத்தம் புரிந்தது, சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது, சமாதானத்தை ஏற்படுத்தியது, கல்வியை மீளமைத்தது எல்லாம் இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அல்ல. முதலாளித்துவ ஆட்சிக்காகவும் அதன் எஜமானர்களுக்காகவுமேயாகும். எனவே தற்போதைய லாபத்தை பகிர்வதில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதன் பிரதிபலிப்புகளாக நிரந்தர தொழிலில்லாதவர்கள் எணிக்கை அதிகரிக்கும். தொழில் செய்பவர்கள் தொழில் இழப்பர். ஆகக்குறைந்த மனித உரிமைகளும் இல்லாமல் போகும், மனிதர்கள் மனிதர்களாக உயிர்வாழும் உரிமை மறுதலிக்கப்படும். இத்தனைக்கும் நடுவில் வரவு செலவு திட்ட நாடகம் அரங்கேற்றப்படுகிறது. இந்த முதலாளித்துவ அரசு யுத்தம் புரிந்ததும் தேர்தல் நடத்துவதும், அடக்கு முறைகளை கட்டவிள்த்து விடுவதும் தமது நெருக்கடிகளை முடிமறைக்கும் முயற்சியாகும். 2001, 2002இல் ஐ.தே. கட்சி ஆட்சியில் சமர்ப்பித்த வரவு செலவு திட்டங்களும் இதுதான். 2004,2005இல் ஐ.ம.சு.கூட்டமைப்பு ஆட்சியில் நடந்ததும் இதுதான். இன்று மஹிந்தராஜபக்ச அரசு பின்பற்றுவதும் இதைத்தான். இவர்கள் அனைவரும் முதலாளித்துவ நெருக்கடிகளை ஒழுங்கு படுத்த அல்லது பின்தள்ள முயற்சிக்கின்றனர். இன்றைய வலதுசாரி எதிர்கட்சிகள் மட்டுமன்றி இடதுசாரி எதிர்கட்சிளும், அரசில் அங்கம்வகிக்கும் இடதுசாரிகளும் இன்றைய நெருக்கடிகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என கூறுவார்களேயாயின் அது அர்த்தமற்றதாகும். இடதுசாரி கட்சிகள் மாற்று முறைமைக்காக போராடாமல் இந்த ஒட்டைக்கு பிளாஸ்ரர் ஒட்ட முயற்சிப்பது பயனற்றதாகும். இடதுசாரிகளுக்கு நாம் அழைப்புவிடுக்கிறேம் இந்நிலமை தொடர்பில் கலந்துரையாடி போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் நாமல்ராஜபக்ச கோட்டபாயராஜபக்ச மஹிகிந்த ராஜபக்ச் ஆகியோரை பொறுத்தவரை இந்த வரவு செலவு திட்டம் தேசிய பாதுகாப்பு வரவு செலவு திட்டமாக இருக்கலாம், ஆனால் இது மக்களின் பாதுகாப்புக்கு உகந்ததா என நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இந்த தேசிய பாதுகாப்பு என்பது முதலாளிகளினதும் முதலளித்துவ அரசினதும், முதலாளித்துவ எஜமானர்களினதும் பாதுகாப்பே தவிர இந்நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு உரியதல்ல. முதலாளித்துவ ஆட்சியின் பாதுகாவலர்களான கோட்டபாய ராஜபக்ச, மஹிக்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோரின் பாதுகாப்பையே குறிக்கும் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்சியாளர்களால் ஆட்சியை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது. எனவே மக்களை நெருக்கடிக்குள் தள்ளவேண்டும். நெருக்கடிகள் அதிகரிக்கும்போது மக்கள் கிளர்ந்தெழுவார்கள் மக்கள் கிளர்தெழும்போது பாதுகாப்பு அமைச்சு தனது கடமையை சரியாக செய்யும். அதற்காகவே பாதுகாப்பு அமைச்சுடன் நகர அபிவிருத்தி அமைச்சு இணைக்கப்பட்டு கேளிகைகள் காண்பிக்கப்படுகிறது. இதற்க்கு பக்கபலமாக பொதுபலசேனா போன்ற அமைப்புகளுக்கு உதவிசெய்யப்படுகிறது. ஒரு பக்கம் கனவுலக அரசியல் மறுபக்கம் முரண்பாடு அரசியல். துமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள், சிங்களவர்களுக்கு எதிராக தமிழ் முஸ்லிம் மக்கள் என உசுப்பிவிட்டு முரண்பாட்டு அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. கேளிகை கூத்துகளினாலும் முரண்பாடுகளினாலும் முடியாமல் போகும்போது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும். கேளிகை, முரண்பாடு, அடக்குமுறை, ஆகிய மூண்றையும் ஒன்றிணைத்த மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் தேசிய பாதுகாப்பு வரவு செலவு திட்டமே இது. இன்று மக்கழுக்கு ஒரு வேளைகூட ஒழுங்கான உணவு கிடையாது, பிள்ளைகளை படிப்பிப்பது இயலாத காரியமாகியுள்ளது, மருந்துகள் வாங்க முடியாது நெருக்கடிகளுக்கு மத்தியில் சிக்கியுள்ள மக்களை ஏமாற்ற சமர்பிக்கபட்டுள்ள கனவுலக வரவு செலவு திட்டமிது. மக்களின் கவனத்தை திசைதிருப்ப முரண்பாடுகளை எதிரிகளாக காண்பிக்கப்படுகிறது. இதை ஏற்காதவர்கள் அடக்குமுறை செய்யப்படுகிறார்கள் இந்த ஆட்சியாளரின் கண்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் தெரிவதில்லை. கொழும்பிலும், ஏனைய நகரங்களிலும், கிராமங்களிலும் குடிசைகளில் வாழும் மக்கள் தெரிவதில்லை. மிகச்சிறிய தொகையினரான தனவந்தர்களுக்காகவே இந்த அரசு செயல்படுகிறது. இச்சிறு தொகையினருக்கே நாடு முழுவதும் பரந்து வாழும் மில்லியன் கணக்கான மக்களுக்குரிய நிதி செலவிடப் படுகிறது. கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளுக்கு செலவு செய்ய வேண்டியது அரசாங்கமே. ஆனால் இன்று இந்த செலவுகள் மக்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. உற்பத்தித்துறை நிர்க்கதிக்குள்ளாக்கப் பட்டுள்ளது. உற்பத்திதுறையினின் உழைப்பு, வேர்வை, கண்ணீர் அனைத்தும் வீண்விரயம் செய்யப்படுகிறது. வுடக்கு மக்களுக்கு குடியிருக்க வீடு இல்லை. தெற்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவிதமான நிவாரணமும் இல்லை. குடிசைவாழ் மக்களுக்கு வீடில்லை. ஆனால் ஓட்டப்பந்தய மைதானம் நிர்மானித்து பெருமைபட்டுக் கொள்கிறீர்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசிடம் தீர்வுஎதுவும் கிடையாது இடதுசாரிகள் சிந்திக்க வேண்டும்.

கேளிக்கைகளால் பலன் இல்லை என்றதும் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுகிறீர்கள். பொதுபலசேனாவை பலப்படுத்துகிறீர்கள். தமிழ் சிங்கள மக்களிடையே இனவாதத்தை பரப்புகிறீர்கள். கொழும்பு பம்பலப்பிட்டி இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவிற்க்கு ஜனாதிபதி சென்றிருந்தார் ஜனாதிபதி சமூகமாக இருந்தபோது தேசியகீதம் பாடப்பட்டதா? அவர் சென்றபின்னர்தான் தமிழில் தேசியகீதம் பாடப்பட்டது. இன ஒருமைப்பாடு பற்றிபேசும் நீங்கள் தமிழ் மக்களை அரவணைப்பது இப்படித்தான் முரண்பாட்டை விதைக்கிறீர்கள் இதற்காக பாதுகாப்பு பிரிவில் சிலரை பயன்படுத்துகிறீர்கள். இராணுவம், பொலிஸ், பாதுகாப்பு படையினரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவெனில் சீருடையை களைந்துவிட்டு கண்ணாடி முன்நின்று பாருங்கள் உஙகள் நிலைமை என்னவென்று. உங்களது குடும்பங்களுக்கே வாழமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதார சேவைகள் மறுதலிக்கப்பட்டுள்ளது. போலியாக யுத்தவீரர்கள் எனக்கூறி ஏமாற்றுகின்றனர். எமது சகோதரர்களை சுடும்படியும், எமது சகோதரார்கள்மீது குண்டு போட்டு நீதிமன்றில் நிறுத்தும்படி உங்களுக்கு உத்தரவிடுகின்றனர். பல்கலைக் கழக மாணவர்கள், தொழிலாளர், மக்கள் போராட்டங்களை அடக்குமுறை செய்வதற்க்காக உங்கள் நண்பர்களை பொல்லால் தாக்கினீர்கள்., கண்ணீர்குண்டுகளை வீசினீர்கள், துப்பாக்கி சூடு நடாத்தினீர்கள். இந்த பொருளாதார முறைமையின் கீழ் மக்களுக்கு எந்த நன்மையையும் வளங்க முடியாது, எனவேதான் பாதுகாப்பு படைகளை பயன்படுத்தி மக்கள்மீதாக அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனவேதான் நான் பாதுகாப்புபடை சகோதரர்களிடம் கேட்டுக்கொள்வது உங்களது உண்மையான எதிரிகளை இனம் காணுங்கள். நீங்கள் பாதுகாப்பது உங்கள்மக்களையா? சகோதர மக்களுக்கு தீங்கு செய்ய வேண்டியுள்ளது பற்றி சிந்தியுங்கள். இந்த கனவுலகத்தை தோலுரித்துக்காட்டும் ஊடகவியலாளர், கலைஞர்களுக்கு என்ன நடக்கிறது. தனது தாயாரை அடக்கம் செய்த இடத்தை தரிசிக்க வந்த கவிஞர் ஜெயபாலனுக்கு நடந்ததென்ன? 2010 மனிதஉரிமைகள் தினமான மே 10ஆம் திகதி வடக்கு, கிழக்கு, தெற்க்கு மக்கள் மத்தியில் சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப உழைத்த லலித்விராஜ், குகன் கடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டது அவர்களுக்கு என்ன நடந்தது பதில் சொல்லுங்கள். இன்றும் வடக்கில் முழுமையான இராணுவ அதிகாரம் கோலோச்சுகிறது முடிந்தால் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்திக் காட்டுங்கள். பாடசாலைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் புள்டோசர்களால் தகர்க்கப்படுகின்றன. சிறைச்சாலைகளில் கைதிகளுக்கும் சுதந்திரமில்லை. நான் ஆட்சியாளர்களிடம் எதையும் கேட்கவில்லை., அதில் பயனும் இல்லை. எனவே நான் இந்நாட்டின் அனைத்து மக்கள் பிரிவினரிடமும் கேட்டுக்கொள்வது என்னவெனில், ஏமாற்றுகளுக்கு மசியவேண்டாம். உங்கள் உரிமைகளை பறிப்பதற்க்கு எதிராக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் கிளாந்தெழுங்கள் போராடுங்கள் அதற்கான காலம் கனிந்துள்ளது.

# புரட்சிகரப் பெண்ணிய சக்திகளின் பணி

புரட்சிகர சமூக மாற்றத்துக்காகப் போராடும் சக்திகள் மற்றும் முற்போக்குப் பெண்ணியவாதச்சக்திகள், □புரட்சிக்குப் பின் எல்லாம் சரியாகிவிடும்” எனவும், □சோசலிசம் எல்லோரையும் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவித்து விடும் அதுவரை சோசலிசத்துக்காக போராடுவோம்” என்றும் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. விபச்சாரம் போன்ற பெண்ணொடுக்குமுறை சார்ந்த விடயங்களை ஒழிப்பதற்கு போராடுவதும், தற்காலிகமான சிறு சிறு வெற்றிகளுக்கான- மாற்றங்களுக்காகப் போராடுவதும் சோசலிசப் போராட்டத்தின் ஒரு பகுதிதான்.

இன்றுள்ள நவதாராளப் பொருளாதரா உலக ஒழுங்கில் பெண்ணொடுக்குமறையானது படு மூர்க்கத்தனமானதொன்றாகவே உள்ளது. நிறம், தேசம், மொழி, கலாச்சராம் கடந்து பெண்ணொடுக்குமுறை எங்கும் வியாபித்துள்ள பிரபஞ்சப் பிரச்சனையாகவேயுள்ளது. இதன் அடிப்படையில், பெண்ணொடுக்குமுறையின் ஒரு வெளிப்பாடான விபச்சாரமும் எங்கும் ஒரே மாதிரியான முறையிலேயே இன்று பெரும்பாலும் வியாபித்துள்ளது. நவதாராளப் பொருளாதரா சிந்தனைக்கேற்ப, விபச்சாரத்தைத் தொழிலாக அங்கீகரித்து, அதைப் பணமீட்டும் செயற்பாடாக மாற்றுவதற்கெதிராகப் பல மேற்கத்தைய நாடுகளின் இடதுசாரிப் புரட்சிகர சக்திகள் போராட்டம் நடாத்துகின்றனர். சில சிறு சிறு வெற்றிகளையும் அப்போராடங்கள் மூலம் பெற்றுள்ளனர்.

இதன் அடிப்படையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இப்பிரச்சனை எவ்வாறு உள்ளது, அதற்கான தீர்வுகள் எவ்வாறு இன்றுள்ள சமூக முறைமைக்குள் வைக்கப்படுகின்றதெனப் புரட்சிகர- சமூகமாற்றத்துக்காகப் பெண்களும் சிறுவர்களும், அதன் அதி உச்ச பாதிப்புக்கு உள்ளாகுகிறார்களோ அதேபோன்றே ஒரு நாட்டில்(உதாரணம் : கிரீஸ் ) அல்லது ஒரு பொருளாதார வலயத்தில் (ஐரோப்பிய யூனியன் ) பொருளாதார வீழ்ச்சியடையும் போது அதன் உச்சபட்ச பாதிப்பைச் சந்திப்பவர்கள் பெண்களும் சிறுவர்களுமாகவே உள்ளனர். கருக்கலைப்பு செய்வோரின் தொகை அதிகரிப்பு, குடும்பங்களில் சீர்குலைவு, போதை வஸ்து - மற்றும் மதுப்பாவனை அதிகரிப்பு, உளவியற் பிணிகள் அதிகரித்தல், சமூக நல உதவியில் வாழும் குடும்பங்கள் அதிகரித்தல் போன்ற பெண்களையும் குழந்தைகளையும் நேரடியாக ஒருவரிடம் பாலியல் உறவில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் யார் பாலியல் நடவடிக்கையை பணம் கொடுத்துப்பெற முயல்கின்றாரோ அவரே குற்றம் இழைப்பவராவார். இச்சட்டத்தின் அடிப்படைகள் என்னவென்றால் 1. பொருளாதார வறுமை, உடல் உளவியற் பிணி மற்றும் சமூக ஒடுக்குமுறை விபச்சாரத்துக்கு ஒருவரைத் தள்ளுகிறது. 2. விபச்சாரத்துக்கான அடிப்படைக்காரணிகளை உருவாக்குவது சமூகமேயொழிய, அதில் ஈடுபாடும் தனிமனிதம் அல்ல. 3. இந்த வகையில் விபச்சாரம் என்பது, பெண்கள், அல்லது அதில் ஈடுபட வைக்கப்பட்டவர்கள் மீதான வன்முறையாகும். 4. இதன்



போராடும் சக்திகள் தெரிந்து கொள்வது தேவையாகிறது.

ஐரோப்பிய பொருளாதார வீட்சியும் விபச்சாரமும்

சந்தைப் பொருளாதார வீட்சி, உலகமயமாதல், வேலையில்லாத்திண்டாட்டம், குடியிருப்புக் கடன் சுமைகள், குறைக்கப்படும் அரச மானியங்கள் போன்ற பல சமூகப் பொருளாதாரக் காரணிகளால் இன்று அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ மேற்கத்தைய நாடுகளில் பொருளாதார வறுமையால் பாதிக்கப்படுவோரின் தொகை அதிகரித்த வண்ணமுள்ளதாக சமூகஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. அத்துடன் அந்நாடுகளில் வதியும் புலம்பெயர்ந்தவர்கள் கூட, அங்குள்ள சமூக ஓட்டத்தைக் கவனித்தால் மேற்கூறிய விடயத்தை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். ஐரோப்பாவை பொறுத்தளவில் பல வருடங்களாக, சமூக ஜனாயக (ஞழஉயைட னுநஅழஉசயவைஉ) கோட்பாட்டைக் கொண்ட, ஒப்பீட்டளவில் மக்கள் நலம் சார்ந்த அரசுகளால் பல சமூக நலக்கட்டமைப்புகள் மற்றும் இலவச அரச சேவைகள் உருவாக்கப்பட்டது. கருவறையிலிருந்து கல்லறை வரையும் ஏதோவொரு விதத்தில் அரசின் பங்களிப்பு இருந்து வந்தது. இம்முறைமையை 80 இக்குப் பிற்பட்ட காலத்தில், அரசைக் கைப்பற்றிய வலதுசாரிய கட்சிகளும் அவை சார்ந்த நிறுவனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியமைத்தன. 90 ஆம் ஆண்டுகளில் அனைத்துக் கட்சிகளும், இடது வலது என்ற வித்தியாசமின்றி நவதாராளப் பொருளாதார கட்டமைப்பை நிறைவேற்றும் நோக்கில், சமூகநல அரசு எனப்படும் (றுநடகயசந ளுவயவந) சமூக ஜனநாயக அரச கட்டமைப்பை முற்றுமுழுதாக உடைத்தெறிந்தன. நவ தாராளப் பொருளாதார அடிப்படையில் சமூகநல அரசுக்கட்டமைப்பை உடைக்கும் செயற்பாடு இங்கிலாந்தில் மாகிரத் தட்சரின் அரசுக் காலத்தில் ஆரம்பித்து, முழு ஐரோப்பிய நாடுகளிலும் பரவி, இப்போது மிகவும் வளர்ச்சியடைந்த சமூகநல அரசுக் கட்மைப்புகளைக் கொண்ட இஸ்கன்டிநேவிய நாடுகள் வரை வந்துள்ளது.

யுத்தங்கள் நடக்கும் போது எவ்வாறு பாதிக்கும் சமூகப் பொருளாதார வீட்சியால் உருவாகும் பிரச்சனைகள் இன்று பரவலாக காணக்கூடியதாக சூழல் மேற்படி நாடுகளில் உள்ளது. அத்துடன் இன்று மிக உக்கிரமாக அதிகரித்து வரும் பிரச்சனையாக விபச்சாரம் இந்நாடுகளில் உருவெடுத்துள்ளது. இன்று, குறிப்பாக ஐரோப்பியன் யூனியனுக்குள்ளும், அதன் இணைப்பு நாடுகாளில் ஒன்றான நோர்வே உட்பட்ட இஸ்கன்டிநேவிய நாடுகளிலும் விபச்சாரம் சமூகப் பிரச்சனையாக உருவாகியுள்ளது. மேற்படி ஐரோப்பியன் யூனியனுக்குள்ளும் அனைவரும் இலகுவாக எந்த நாட்டுக்கும், எதுவித கட்டுப்பாடும் இல்லாமல் போய்வர முடியுமாதலினால், விபச்சாரம் என்பது எல்லை கடந்த விடயமாகவுள்ளது. இதிலுள்ள முரண்நகை என்னவெனில், ஐரோப்பியன் யூனியனின் அரசியலமைப்பின் முக்கிய பந்திகளில் ஒன்று, பொருட்களும், சேவையும் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் எல்லை கடந்து முழு யூனியனுக்குள்ளான சந்தையில் இலகுவாக பரிமாற்றம் செய்யப்படுவதாகும். இதில் எந்தவிதத்திலும், பாலியல் சார்ந்த ”வர்த்தகம்” எல்லை கடந்து சந்தைப்படுத்துவது பற்றி கூறப்படவில்லை. ஆனால், இன்று ஐரோப்பிய பொதுச்சந்தையில் எல்லை கடந்து பரிமாறப்படும் பண்டமாக விபச்சாரம் அமைந்துள்ளது. பொருளாதார வீட்சியால் பாதிக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த பெண்கள், மற்ற நாடுகளுக்குச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இஸ்கன்டிநேவிய சட்டங்கள்

இதனால் இன்று ஐரோப்பிய பெண்கள் எல்லை கடந்து விபச்சாரத்தில் ஈடுபடும் நாடுகளாக, நோர்வே, ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகள் திகழ்கின்றன. இதற்கான முதற்காரணிகளிலொன்று இந்நாடுகளின் பொருளாதாரம், மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்திரமானதாக உள்ளதாகும். அதேவேளை, நோர்வேயும் ஸ்வீடனும் பாலியல் சார்ந்த நடவடிக்கைகளில் பணப்பரிமாற்ற அடிப்படையில் ஒருவர் ஈடுபடுவதைத் தடை செய்துள்ளன. அதாவது, பணம் கொடுத்து அடிப்படையில் பணம் கொடுத்து பாலியல் உறவைப் பெறுவோர், அதற்கு முயல்வோர், உதவுவோர் என அனைவரும், சகமனிதம் மீதான வன்முறையிலும் ஈடுபடுவோராக கணிக்கப்படுபவராவார். 5. பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் ஒரு வடிவம்தான் விபச்சாரம் 6. இன்றுள்ள உலமயமாக்கப்பட்ட ஆணாதிக்க சமூகத்தில், பெண்கள் பொருளாதார மற்றும் சமூக அதிகாரங்களில் சமவுரிமை பெறாதவர்களாகவே உள்ளனர்.

இவ்வாறு புரட்சிகரப் பெண்ணிய அடிப்படைகளைக் கொண்டு இந்நாடுகளிலுள்ள மேற்படி சட்டமானது, பலபத்து வருடகாலமாக இடதுசாரியம் சார்ந்த பெண்ணியவாதிகள், புரட்சிகரப் பெண்ணியபோராளிகள், மற்றும் ஜனநாயக சக்திகளின் போராட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். விபச்சாரத்துக்கும் பெண்ணடிமைத்தன்துக்கும் எதிராக உலகளாவிய அளவில் உள்ள மிகவும் முற்போக்கான நோர்வேஜிய மற்றும் ஸ்வீடன் சட்டங்கள், வெறும் பாலியலைப் பணம் கொடுத்து வாங்கும் செயலை மட்டும் தடை செய்யும் சட்டமல்ல. அத்தியாவசிய தேவையை நிறைவேற்றல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல், உடல் உள ஆற்றுப்படுத்தலுக்கான உதவியைக் கோருதல், சமூகம் மற்றும் குடும்பம் சார்ந்த பாதுகாப்பைக் கோருதல் போன்றன விபச்சாரத்துக்கு தள்ளப்படுவோருக்கு அதை விட்டு வெளிவர விரும்பும் போது, சுய விருப்பத்தின் அடிப்படையில் கோரக் கூடிய உரிமைகளாக மேற்படி சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கான உரிமைகளை வழங்கும் அதேவேளை,

பாலியலைப் பணம் கொடுத்து வாங்கும் குற்றவாளிகளுக்கு பெரும்பாலும் ஆண்களுக்கு 1 வருடங்கள் சிறைத்தண்டனையையும், புனர்வாழ்வு பெறுவதற்கு அவர்களை அனுப்ப தீர்ப்பு வழங்குவதற்கும் மேற்படி சட்டங்கள் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்குகின்றன. அத்துடன், விபச்சாரம் மற்றும்

15 ஆம் பக்கம் பார்க்க...

# துப்பாக்கிப் பிரயோகமும், தகவலுக்கு சன்மானத் தொகையும்



அரச பயங்கரவாதத்தை தொடரவும், உலகத்துக்கு படம் காட்டவும், தேர்தலை வெல்லவும், சிங்கள மக்களை ஏமாற்றவும், அரசுக்கு மீண்டும் "புலி" தேவைப்படுகின்றது. புலியை தானே உருவாக்கிவிடவும் அல்லது நிர்ப்பந்தம் மூலம் சமூகத்தில் இருந்து உருவாக்கவும் முனைகின்றது. வன்னியில் தொடர்ந்து நடந்தேறுவது இதுதான்.

துண்டுப் பிரசுர விநியோகம், தேடுதல், துப்பாக்கிச் சூடு, கைதுகள் என, தொடர் அரங்கேற்றம் வன்னியில் நடந்தேறுகின்றது. இந்தச் சம்பவத்துக்குள் தொடர்புபடுத்தி காணாமல் போனவர்களுக்காக போராடிய, சனல் நான்கிற்கு பேட்டி வழங்கிய குடும்பம் கைது செய்யப்பட்டு, பூசாவிலும், சிறுவர் இல்லத்திலும் அடைக்கப்படுகின்றனர். நடந்ததை விசாரிக்கச் சென்ற மனிதவுரிமைவாதிகள் கைது செய்யப்படுகின்றனர். வேறு சிலரது படங்கள் ஒட்டப்பட்டு, சன்மானத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்தும் அரசு பயங்கரவாதத்துடன் பின்னிப்பிணைந்து அரங்கேறுகின்றது. சுயாதீனமாக எதையும் உறுதி செய்ய முடியாத வண்ணம், பயங்கரவாதச் சட்டம் ஏவிவிடப்படுகின்றது. மனிதவுரிமைவாதிகளைக் கூட இது விட்டு வைக்கவில்லை.

உண்மை எது, பொய் எது என்று தெரியாத வண்ணம், ஒட்டுமொத்தத்தில் அரச பயங்கரவாதமே அனைத்தையும் அரங்கேற்றி வருகின்றது. இராணுவக் கெடுபிடிக்குள் சிக்கித் தவிக்கும் வன்னிச் சமூகத்தில், நடந்தேறும் தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களை நசுக்க இவை திட்டமிட்ட சதியாகவோ அல்லது ஒரு தனிநபர் பயங்கரவாத செயலைக் கொண்டு மற்றையவற்றை திட்டமிட்டு நடந்தேறும் அரச பயங்கரவாதமாகவோ இதை நோக்க முடியும். இதனாலான விளைவுகள் மொத்த வன்னிச் சமூகம் மீதான அதிகரித்த வன்முறையாக மாறிவருகின்றது. இலங்கையின் மொத்த மக்களும் வன்னி மக்கள் மேலான இந்த இராணுவமயமாக்கல் மூலமான கெடுபிடிகளை புரிந்து கொண்டு, எதிர்வினையாற்றுவதன் மூலம் தான், எதிர்காலத்தில் இது போன்ற தங்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும் தடுத்து நிறுத்தமுடியும்.

**தனிநபர் பயங்கரவாதம் அதன் வெட்டு முகமும்**

உண்மையில் மீண்டும் ஒரு தனிநபர் பயங்கரவாத செயற்பாடு நடந்ததா என்ற சந்தேகம் இருந்த போதும், தனிநபர் பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை முறை பரந்ததளத்தில் தொடர்ந்து காணப்படுகின்றது. சமூகம் மீதான தொடர்ச்சியான அரச பயங்கரவாதத்திற்கான எதிர்வினையின் வெளிப்பாடு தான் தனிநபர் பயங்கரவாதம். அதற்கான அரசியல் சூழல் இன்று காணப்படுகின்றது.

சமூகம் மீதான அரச பயங்கரவாதத்தை எதிர்த்து சமூகம் போராடுவதற்கு பதில், அரச பயங்கரவாதம் மீது தனிநபர்கள் வன்முறையில் ஈடுபடுவதே தனிநபர் பயங்கரவாதமாகும். இதன் மூலம் அரச பயங்கரவாதத்தை ஒழிக்கலாம் என்று கருதி, நடத்தும் எதிர் பயங்கரவாதமாகும்.

கடந்தகாலத்தில் இயக்கங்கள் நடத்தியது கூட தனிநபர் பயங்கரவாதமும், அதன் அடிப்படையிலான அரசியலும் தான். தனிநபர் பயங்கரவாதம் மக்களை பார்வையாளராக்கி, மக்களில் இருந்த பிரிந்துவிடுவதுடன், மக்களை எதிரியாக்கி விடுகின்றது. இது சமூகத்தை அரச பயங்கரவாத பிடியில் இருந்து விடுவிப்பதற்கு பதில், மேலும் அதிகளவிலான ஒடுக்குமுறைக்குள்ளாகி அடிமைப்படுத்தி விடுகின்றது.

கடந்தகாலத்தில் தனிநபர் பயங்கரவாதம், இனவொடுக்குமுறைக்குள்ளான சமூகம் மீதான அரச பயங்கரவாதத்தை அதிகரிக்க வைத்ததேயொழிய, பயங்கரவாதத்தில் இருந்து சமூகத்தை மீட்கவில்லை. வடக்குகிழக்கு மக்கள் சந்திக்கின்ற இன்றைய துயரங்கள், இதைத் தான் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**அரச பயங்கரவாதத்தின் அடிப்படை**

வர்க்கத்தின் அரசாக இருக்கின்ற அரசுக்கான அதன் அடிப்படையில், பயங்கரவாதம் அதனுடன் கூடவே காணப்படுகின்றது. பயங்கரவாதமின்றி வர்க்க அரசாக, அரசு இருக்கவோ நீடிக்கவோ முடியாது. இங்கு தன் வர்க்கத் தன்மையை மூடிமறைக்கவே, ஒரு இனம் மீதான பயங்கரவாதத்தை கூர்மையாக்குகின்றது. இதனால் குறித்த இனம் இரண்டு பயங்கரவாதத்தை ஒருங்கே சந்திக்கின்றது. இந்த வகையில் தான் வடகிழக்கு மக்கள், இனம் மற்றும் வர்க்கம் சார்ந்த இரட்டை வன்முறைக்கு உள்ளாகின்றனர். வர்க்க வன்முறையை மூடி, இனம் சார்ந்த வன்முறை மேவி தன்னை முதன்மையாக வெளிப்படுத்துகின்றது.

அரசு ஒட்டுமொத்தத்தில் தன் வர்க்க ஒடுக்குமுறையை மூடிமறைக்க, சிறுபான்மை மக்களை பெரும்பான்மை மக்களின் எதிரியாக முன்னிறுத்திக் காட்ட வேண்டி இருக்கின்றது. சிறுபான்மை மக்கள் மேலான ஒடுக்குமுறை மூலம், தன் மீது தனிநபர் பயங்கரவாதத்தை தூண்டிவிடுவதன் மூலம், தனது பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதே, அரசின் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பயங்கரவாதக் கொள்கையாகும். இந்த வகையில் தன் மீதான தாக்குதல்களை தானே திட்டமிட்டு அரங்கேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில், அரசு இன்று தனிமைப்பட்டு இருக்கின்றது.

இந்த வகையில் வன்னி நிகழ்வுகள் எதை எடுத்துக் காட்டுகின்றது என்றால், சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்துக்கு எதிராக ஏற்பட்டு வரும் அரசியல் விழிப்புணர்ச்சியைத் தான். தொடர்ந்து இனவாதம் மூலம் சிங்கள மக்களை ஏமாற்ற முடியாது என்ற அரசின் அரசியல் அச்சமே, வன்னியில் மீண்டும் "புலி" என்று சிங்கள மக்களுக்கு புதுப் படம் போட்டு காட்ட வேண்டி இருக்கின்றது. இதனால் அரசபயங்கரவாதம் திட்டமிட்ட நிகழ்வுகள் தான், தொடர்ந்து வன்னியில் நடந்தேறுகின்றது.

**பயங்கரவாதத்தின் அரசியல் விளைவுகள்**

வன்னியை முற்றாக பிற இலங்கை மக்களிலிருந்து தனிமைப்படுத்தி பிரித்துவிடுகின்றனர். இங்கு நடமாடும் சுதந்திரங்கள் தடுக்கப்பட்டு, பிற பிரதேசங்களில் இருந்து வேறுபடுத்தி சூனியப் பிரதேசமாக்கப்படுகின்றது. இதன் மூலம் இராணுவ கட்டமைப்பில் சுரண்டப்படும் சுதந்திரமான மூலதனக்குரிய சிறப்புப் பிரதேசமாக பிரிக்கப்படுகின்றது. அதேநேரம் தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களை பயங்கரவாதமாக காட்டிவிட முனைகின்றனர். காணாமல் போனவருக்கான குரல்களை மொத்தத்தில் நசுக்கிவிடவும் முனைகின்றனர்.

முன்னாள் புலிகள் மூச்சுக் கூட விட முடியாத வண்ணம், சுதந்திரமற்ற நிலையில் நடைப்பிணமாக்கப்படுகின்றனர். அச்சத்தையும், பீதியையும் சமூகத்தில் பொது உணர்ச்சியாக்கி, தங்கள் பயங்கரவாத தேவைக்குள் அடங்கி கிடக்கும் அடிமையாக்க முனைகின்றனர். பாலியல் ரீதியான நிரந்தரமான வன்முறை அச்சத்துக்குள் பெண்களை வாழுமாறு நிர்ப்பந்திப்பதுடன், தங்கள் பாலியல் தேவைக்கு தாமாக இணைங்கிப் போகுமாறு அரச பயங்கரவாதம் சமூகத்திடம் கோருகின்றது.

மொத்தத்தில் எதிர்ப்பின்றி இணைங்கி போகும் அடிமைகளாக, வன்னி மக்களை வாழுமாறு பயங்கரவாதம் நிர்ப்பந்திக்கின்றது. முடிவாக வன்னி மக்களை இந்த நிலைக்கு உள்ளாக்கும் பயங்கரவாதத்தை எதிர்த்து அனைத்து இலங்கை மக்களும் போராடுவதன் மூலம் தான், தன் மீதான பயங்கரவாதத்தை தடுத்து நிறுத்த முடியும். அரசின் இனவாதத்திற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சியே, வன்னியில் அதிகரிக்கும் அரச பயங்கரவாதத்தின் வெளிப்பாடு என்பதை சிறுபான்மை மக்கள் புரிந்துகொள்வது அவசியமானது. இதை புரிந்து கொள்வதன் மூலம், இனவாதத்திற்கு எதிரான சிங்கள மக்களின் கரங்களை பலப்படுத்தும் வண்ணம், சிறுபான்மை மக்கள் இந்த அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளவேண்டும். இதற்கு மாறாக எதிரான மற்றொரு தனிநபர் பயங்கரவாதமோ, எதிர் இனவாதமோ அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்திவிடும் என்பதை சிறுபான்மை மக்கள் புரிந்து கொண்டு, இனவாதத்துக்கு எதிரான சிங்கள மக்களுடன் தங்களை இணைத்துக்கொண்டு போராட வேண்டியதையே வன்னி நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றது.

# "தமிழன்" என்ற அடையாள அரசியலும், அதன் செயற்பாடுகளும் தோற்றுப்போவது ஏன்?

மனிதம் பகுத்தறிவைக் கொண்டது. தன் செயலுக்குத் தானே பொறுப்பாளி. தன் நடத்தையால் ஏற்படும் விளைவுகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும். தன் செயலுக்காக மற்றவர் மீது குற்றம் சுமத்த முடியாது. தன் இனத்தின் பெயரால் வாக்குப் போட்டதாகட்டும், புலிகளை ஆதரித்ததாகட்டும், போராட்டத்துக்கு நிதி கொடுத்ததாகட்டும், ஐ.நாவை நம்பி கூக்குரல் போட்டதாகட்டும், தன்னை தன் இனம் சார்ந்த பார்வை ஊடாக உணர்ந்ததாகட்டும், மொத்தத்தில் இந்த அரசியற் செயல்கள் மூலமான அனைத்து அரசியல் விளைவுக்கும் இனம் சார்ந்தே பொறுப்புக் கூற வேண்டும். தானும் சம்மந்தப்பட்ட விடையத்தை, தனக்குச் சம்மந்தமல்லாத விடையமாகக் காட்டிக் கொள்வது அறிவுமல்ல, நேர்மையுமல்ல, அறமுமல்ல!

இப்படி வெறுமனே இன அடையாளங்கள் மூலமான எமது செயல்கள் முடிவின்றி தொடர்வதும், தோற்பதும் தொடருகின்றது இதற்கு யார் பொறுப்பாளிகள்? இதை ஆதரித்தவர்களா? அல்லது இதற்கு தலைமை தாங்கியவர்களா? அல்லது இரண்டு தரப்புமா பொறுப்பு?

எப்போதாவது இதையொட்டிய தோல்விகளையும், தவறுகளையும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றார்களா இதற்குப் பொறுப்பானவர்கள்?, அவர்கள் இதற்கான காரணங்களைக் கண்டறிந்துள்ளனரா? தமது செயல்களின் விளைவுகளை உணர்ந்திருக்கின்றார்களா? தோற்றவர்கள் தங்களை நோக்கி எழுப்ப வேண்டிய கேள்விகள் இவை. இனவாத அரசியலுக்கு தலைமைதாங்கியவர்கள் தோற்றுப்போனதற்கான கூறும் காரணங்களும், விளக்கங்களும் உண்மையானதா? தோற்றுப்போனதற்கான காரணங்கள் அனைத்தும் பற்றித் தமக்குத் தெரியாது எனத் தலைமை தாங்கியவர்கள் கூறுவார்களேயானால் அது மக்களை ஏமாளிகளாக்குவதற்கு என்பதே உண்மையாகும்

அரச பேரினவாதமாகட்டும், இந்தியா முதல் அமெரிக்கா வரையாகட்டும், மக்களுக்கு உரிமைகளை வழங்காது என்பதும், போராட்டங்களைத் தோற்கடிக்கும் என்பதும் தெரியாமலா தலைமை தாங்கினர்! யுத்தத்தில் மிகக்கேடானதும், மனிதகுலத்துக்கு அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை மக்கள் மேல் பயன்படுத்துவார்கள் என்பது தெரியாமலா ஆயுதப் போராட்டத்துக்கு தலைமை தாங்கினர்! ஐ.நா என்பது ஏகாதிபத்தியவாதிகளின் மக்கள் விரோதக் கூடாரம் என்பது தெரியாமலா இவர்கள் அரசியல் நடத்துகின்றனர்!

இந்தக் கேள்விகள் இன்று அடிப்படையானது. தோற்றுப்போனதற்காக கூறும் காரணங்கள் அனைத்தும், முன்கூட்டியே எதிர்பார்த்திருக்கப்பட வேண்டியவை. தோற்றுப்போனதற்காக கூறும் காரணங்களை எதிர்கொள்ளாத போராட்டம் என்பது, முட்டாள்தனமானது. தொடர்ந்து தோற்பதற்கான அரசியல் பொறுப்பை, இந்த இனவாத அரசியல் ஏற்றாக வேண்டும். இந்த அரசியலை தொடர்ந்து ஆதரிப்பதில் இருந்து தமிழ் மக்கள் விடுபட்டாக வேண்டும். மாற்றுப் போராட்ட வழிகளைக் கண்டாக வேண்டும். கடந்து வந்த பாதைகள் கசப்பானதும், தமிழ் மக்களைத் தொடர்ந்து தோற்கடிப்பதாகவுமே இருக்கின்றது.

அடையாள அரசியலின் சாரம் என்ன?

தமிழன் என்ற இன அடையாளத்தை முன்னிறுத்தும் அரசியல் அறிவுபூர்வமானதா? பகுத்தறிவுத் தன்மை கொண்டதா? சமூகநலத் தன்மை வாய்ந்ததா? எனில், இல்லை. மாறாக வெறும் அடையாளமும், வெறும் உணர்ச்சியும் சார்ந்தது. இனவாதமே இதன் அரசியல் உள்ளடக்கமாகும்.

இனம் என்னும் அடையாள அரசியலை அரசு தோற்றுவிக்க, அதற்கு ஏற்றாற் போல் சுயத்தை இழந்து கூத்தாடுவதா மக்கள் நலம் சார்ந்த அரசியல்? கோவிற் திருவிழாக்களில் உருவாடுவது போல், பேரினவாத கூத்துக்கு தாளம் போட்டு கூத்தாடுவதா மக்கள் விடுதலைக்கான அரசியல்? ஆக இனவடையாள அரசியல், பகுத்தறிவு பூர்வமாக சிந்தித்து உருவானதல்ல. மக்கள் போராட்டங்களை மூலம் வளர்க்கப்பட்டதுமல்ல.

"சிங்களவன்" என்ற இன அடையாளம் மூலம் அரச பேரினவாதம் முன்தள்ளும் அதே இனவாதத்தையே, "தமிழன்" என்ற இன அடையாளம் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் மீள அரசியலாக்கப்படுகின்றது. 1980 களில் இந்தியா ஆயுதப் பயிற்சியும் பணமும் கொடுத்து மக்கள் போராட்டத்தை தோற்கடித்த அதே கதைதான், இலங்கை அரசு தூண்டிவிடும் இனவாத அரசியலுக்கும் நடக்கின்றது.

இன ஒற்றுமையை முன்னிறுத்தி எம்மவர்கள் சாதி பார்ப்பதை நிறுத்தினார்களா? மக்களிடையே வெறுப்பைத் தூண்டும் பிரதேசவாதத்தை இல்லாதொழித்தனரா? ஆணாதிக்கத்தை கை விட்டனரா? தமிழனைத் தமிழன் சுரண்டுவதை இல்லாதாக்குகின்றனரா? ஆக இனவடையாள அரசியல், இன ஒற்றுமைக்கான அரசியலைச் செய்வதில்லை. ஒற்றுமைக்கு முரணாகவே இனவடையாள அரசியல் மக்களைப் பிரிக்கின்றது.

இனத்தை முன்னிறுத்தும் அரசியல் எமக்குள் இருக்கும் ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தி பாதுகாக்கின்றது என்பதே உண்மையாகும். இதனடிப்படையில் தன்னைத்தான் தோற்கடிப்பதே இந்த அரசியலின் உள்ளடக்கம். ஒரு இனம் தனக்குள் ஒடுக்குமுறையை வைத்துக் கொண்டு, எப்படித் தன் மீதான இனவொடுக்குமுறையை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியும்? தன்னைத் தானே தோற்கடிக்கும் அரசியலை தன்னகத்தே கொண்டபடி, பேரினவாதத்திடம் தோற்பதே எம்மவர்களின் தற்கால வரலாறாக இருக்கிறது.

இனவரசியல் என்பது இனவாதமேயொழிய மக்கள் அரசியலல்ல

இனவொடுக்குமுறைக்கு எதிரான மற்றொரு இனவாதம் என்பது, எப்போதும் மக்களுக்கு எதிரானதாகவே இருக்கும். இந்த வகையில் "தமிழன்" என்ற அடையாள அரசியல், இனவாதத் தன்மை கொண்டதும், மக்கள் விரோதத்தன்மை கொண்டதுமாகும். மேற்கூறியபடி, ஒடுக்குகின்ற அரச இனவாதத்தை எதிர்க்கும் இனவரசியல், தோற்பதற்கான அடிப்படைகளை கொண்ட ஒன்றாக இருக்கின்றது. இதையே புலிகளும், கூட்டமைப்பும் காலங்காலமாக முன்னெடுத்தன, இன்றும் முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றது.

இனவாதத்தைப் பிரயோகிக்கும் அரசின் நோக்கம் "தமிழனை" ஒடுக்குவதை மட்டும் குறிக்கோளாக கொண்டதல்ல. மாறாக அனைத்து மக்களையும் சுரண்டும் அரசாகவும் இருக்கின்றது. அது சிங்கள - தமிழ் என்று மக்களை இனரீதியாக வேறுபடுத்தி, தமிழனை மட்டும் சுரண்டுவதில்லை. மாறாக சிங்கள மக்களையும் கூட சுரண்டுகின்றது. இந்தச் சுரண்டலை தமிழ் இனவாதத்தை முன்னிறுத்தும் அரசியல் எதிர்ப்பதில்லை. மாறாக ஆதரிக்கின்றது.

இங்கு "தமிழன்" மேலான இனவொடுக்குமுறை மூலம், அரசு "சிங்களவன்" இனவாத சமூக உளவியல் சார்ந்த ஒற்றுமையை உருவாக்கி அனைவரையும் அடக்கியாளவே முனைகின்றது. அதாவது, தமிழன் என்ற இனவடையாள அரசியல் போல - சிங்களவன் என்ற இனவடையாள அரசியலைப் பயன்படுத்தி, இரு இனங்களிலும் உள்ள பெரும்பான்மை உழைக்கும்- ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரித்தாளுவதே இனவொடுக்குமுறை மற்றும் இனவாத அரசியலின் சாரமாகும்.

இதற்கு மாறாக மக்கள் செயற்பட்டால், என்ன நடக்கும்? அரசு இனவொடுக்குமுறையை தமிழ் மக்கள் மேல் செய்ய முடியாது. அதாவது, சிங்கள மக்களுடன் - ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் சார்ந்து இணைந்து போராடுவதன் மூலம், அவர்கள் அரசுக்கு எதிராக- அதன் இனவாதத்துக்கு எதிராகப் போராடுவார்கள்.

இதுதான் உண்மை. இதற்கு தடையாக இருப்பது, எம்மவர்களின் இனவாத அரசியல். இது தமிழ் மக்கள் மீதான இனவொடுக்குமுறை அதிகரிக்க வைக்கின்றதே ஒழிய, அதில் இருந்து மீள்வதற்கு வழிகாட்டவில்லை. மாறாக தொடர்ந்து தோற்றுப்போகும் அரசியலாகவும் இயங்குகின்றது.

மீண்டும் தமிழ் மக்களை ஐ.நா வரை கூட்டிச் சென்று புதைத்தவர்கள் யார்?

தற்போது ஐ.நாவை நம்பி மீண்டும் ஒருமுறை தமிழ் மக்கள் தோற்ற கதையை எப்படி புரிந்து கொள்வது? போராட்டங்கள் தொடர்ந்து ஏன் தோற்றுப்போகின்றது? தமிழ் மக்களுக்கு ஐ.நாவும் கூட ஒரு முள்ளிவாய்க்காலாகி விட்டதே ஏன்?

ஐ.நாவை நம்பி ஏமாந்தது தமிழ் மக்கள் என்றால், அப்படி நம்ப வைத்து ஏமாற்றியவர்கள் யார்? அந்த அரசியலில் உள்ளடக்கம் தான் என்ன ? பகுத்தறிவுபூர்வமாக தமிழ் மக்கள் கேட்க வேண்டிய கேள்வி. போராட்டத்தை தோற்கடித்தது மேற்குநாடுகளா? இந்தியாவா? ஒவ்வொருவரும் எம்மை நாம் கேட்ட வேண்டிய கேள்வியும், மற்றவர்களைப் பார்த்து கேட்டவேண்டிய கேள்வியும் கூட.

தமிழ் மக்கள் மீதான இனவொடுக்குமுறைக்கு நீண்ட வரலாறு உண்டென்றால், அதை எதிர்த்த வரலாறும் உண்டு. ஆனால் இதில் இருந்து மீண்டதாகவோ, வென்றதாகவோ கூற முடியுமா? ஏன் இந்த அவல நிலை. இன்னும் எவ்வளவு காலம் இந்த வழியில் தொடரப் போகின்றோம்!?

இனத்தைச் சொல்லி அரசியல்வாதிகளை தூக்கி நிறுத்தினோம். அவர்களுக்கு வாக்குப் போட்டோம். ஆயுதம் ஏந்திப் போராடியவர்களுக்கு ஆதரவு தெரிவித்தோம். நாம் மக்கள் தொடர்ந்தும் தோற்பதற்கு காரணமாக இருப்பவர்களுக்கு, இன்றும் ஆதரவாக தேர்தல் அரசியலுக்கு உதவுகிறோம். எல்லாம் எதற்காக? ஏன்?

1970 களில் பாராளுமன்றப் பாதை தோற்றுப் போக, 2009 இல் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் தோற்றுப்போக, 2014 இல் பகுத்தறிவற்ற முட்டாள்தனத்தால் ஐ.நாவில் மீண்டும் தோற்றுப் போனோம்.

மேற்கு நாடுகளும், இந்தியாவும் மக்களை ஏமாற்றியது வரலாறாக இருக்க, அவர்கள் எம்மை ஏமாற்றவில்லை. மாறாக எம்மை ஏமாற்றியவர்கள், அவர்களை நம்பச் சொன்னவர்கள் தான். உதாரணமாக ஊர் அறிந்த ஏமாற்றுப் பேர்வழிக்கு, கடனாக காசைக் கொடு என்று கூறுகின்றவர்கள் யாரோ, அவர்கள் அல்லவா இதற்கு பொறுப்பு. இதே போல் ஐ.நாவை நம்ப வைத்தவர்களும் அந்த அரசியலும் அல்லவா எம்மை ஏமாற்றியது. ஆக இது தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றிப் பிழைக்கும் அரசியலாக இருக்கின்றது.

அரசியல் பித்தலாட்டமும், மோசடியும் "சிங்களவனை" நம்ப முடியாது என்று கூறி, சிங்கள மக்களை தமிழ் மக்களின் எதிரியாக காட்டி, அரசுடன் பேரம் பற்றி பேசும் அரசியல் என்பது மோசடியானதும் பித்தலாட்டமானதாகும்.




தேர்தல், அரசியல் இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கு வழிகாட்டுகின்றது என்றால், இந்த அரசியல் வழியில் உருவான ஆயுதப் போராட்டம் கொல்வதன் மூலம் நாட்டை பிரித்து தீர்வு காண்பதையே மேலதிகமாக முன்வைத்தது. இவ்விரு முறைகளும் தமிழ்மக்கள் மேலான இனவொடுக்குமுறைக்கு தீர்வாகவில்லை. இந்த அரசியல் சொந்த மக்களைக் கண்டு அஞ்சுவதுடன், மக்கள் அரசியலை மறுத்தே வந்திருக்கின்றது. தமிழ் மக்களையும் சரி, சிங்கள மக்களையும் சரி, அணிதிரட்டி தீர்வு காண்பதற்கு முனையவில்லை. மாறாக

1.தமிழ் மக்கள் தமக்காக தாம் போராடுவதற்கு பதில், தமிழ் மக்களுக்காக சிலர் போராடுவதையே வழிமுறையாக முன்வைக்கின்றது.

2.ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு பிரச்சனையை எடுத்துச் சென்று, அவர்களுடன் இணைந்து தீர்வு காண்பதை எப்போதும் மறுத்து வந்திருக்கின்றது, மறுத்து வருகின்றது.

3.அரசுடன் பேசுவது பற்றியும், சர்வதேச சமூகத்தின் அக்கறை பற்றியும் கூறுகின்றவர்கள், சொந்த மக்கள் பற்றியும், சக இன மக்கள் பற்றியும் அக்கறை கொண்டது கிடையாது, கொள்வது கிடையாது.

இப்படி பிரச்சனையை சந்திக்கின்ற மக்கள், தங்கள் வாழ்க்கை சார்ந்து போராட வேண்டியவர்களாக இருக்க, அதைத் தடுப்பது தான் இனவாத அரசியலாக இருக்கின்றது. மக்களுக்காக தாங்கள் தீர்வு காண்பதாகவும், அதை நம்புமாறும் கூறுகின்ற அதேநேரம், மக்களை அரசியலில் பார்வையாளராகவும் தங்கள் எடுபிடியாகவுமே முன்னிறுத்துகின்றது இந்த இனவாத அரசியல்.

15 ஆம் பக்கம் பார்க்க...

# அமெரிக்காக்காரன் ஜெனீவாவில் புடுங்குவான் என்கின்றது இனவாத தமிழர்கள்

ஈராக் போருக்கு முன்பு அந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதற்காக அமெரிக்க அரசு பொய்மூட்டைகளை அவிழ்த்து விட்டது. மேற்குநாடுகளின் ஊடகங்களில் அமெரிக்க மந்திரிகள் உலக சமாதானத்திற்கான போர், ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கான போர், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று ஊளையிட்டார்கள். பிரித்தானியாவின் தொலைக்காட்சியான சனல் 4 இல் அப்போது அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த கொண்டோலீசா ரைஸ் அப்படியான நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது யாழ்ப்பாணம் சென்று வந்த ஜோன் சிநோ (துழஎ ளுழெற) தான் நிகழ்ச்சியை தொகுத்து நடத்தினர்.

கேள்வி நேரத்தின் போது ஒரு சோமாலியப்பெண் சொன்னார். "நான் பெரிதாகப் படிக்கவில்லை, உலகத்து அரசியலும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும் உலகத்தின் முதலாவது பெரிய பயங்கரவாதி அமெரிக்கா தான். நீங்கள் தான் வேறு எந்த நாட்டையும் விட அதிகமாக மற்ற நாடுகளுடன் போர் செய்திருக்கிறீர்கள். அதிகமான மக்களை கொன்றிருக்கிறீர்கள். மற்ற எல்லா நாடுகளையும் விட அதிகமான, பயங்கரமான ஆயுதங்களை வைத்திருக்கிறீர்கள். ஈராக்கின் எண்ணெயை கொள்ளையடிப்பதற்காக தான் இந்த போர். உங்களது பொய்களை மனச்சாட்சியுள்ள மனிதர்கள் எவரும் நம்பப்போவதில்லை". தொலைக்காட்சி அரங்கத்தில் கைதட்டல் அலை போல எழுந்தது. அரங்கத்தில் இருந்த பெரும்பான்மையான மனிதர்களின், மனச்சாட்சி உள்ள மனிதர்களின் போருக்கு எதிரான வெளிப்பாடு அது.

படிப்பறிவில்லாத, உலக அரசியல் தெரியாத பெண் என்று தன்னைச் சொல்லிக் கொண்ட அந்த சோமாலியப் பெண்ணிற்கு தெரிந்தது நமது புலம்பெயர் கைப்பிள்ளைகளான இனவாத தமிழர்கள் அமைப்புகள், நாடு கடந்த தமிழீழம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பவற்றிற்கு தெரியவில்லை. ஏனெனில் அந்தப் பெண்ணிடம் மனச்சாட்சி இருந்தது. நேர்மை இருந்தது. இவர்களிற்கு மனச்சாட்சி, நேர்மை என்று எதுவும் இல்லாததால் அமெரிக்காக்காரன் ஜெனீவாவில் புடுங்குவான், மற்றவர்கள் எவரும் ஆணியே புடுங்கத் தேவையில்லை என்று மக்களை நம்ப சொல்கிறார்கள்.

உக்கிரேனில் அய்ரோப்பிய ஒன்றிய ஆதரவாளர்களிற்கும், ரஸ்சிய ஆதரவாளர்களிற்கும் மோதல் ஏற்பட்டபோது அமெரிக்காவும், மேற்குநாடுகளும் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு காத்திருந்தார்கள். தானியக் களஞ்சியமான உக்கிரேனைக் கொள்ளையடிக்கவும், ரஸ்சியாவை பலவீனப்படுத்தவும் சந்தர்ப்பம் வந்ததென சந்தோசப்பட்டு நாட்டாமை வேலை பார்க்க ஓடித்திரிந்தார்கள். புலிகளையும், இலங்கை அரசையும் போர்க்குற்றவாளிகள் என்று சமப்படுத்தும் இவர்கள் உக்கிரேனிய போராட்டங்களின் போது முன்னிலை வகித்த நாசிகளைப் பற்றி வாயே திறக்கவில்லை. ரஸ்சிய மாபியா விளாடிமிர் புட்டின் □மயிரை விட்டான் சிங்கன்" என்று சண்டித்தனம் செய்த போது ரஸ்சியா உக்கிரேனை ஆக்கிரமிப்பு செய்வது உக்கிரேனின் இறையாண்மையை மதியாத செயல் என்று அமெரிக்கா சொன்னதைக் கேட்டு பலருக்கு மாரடைப்பே வந்திருக்கும்.

உக்கிரேனில் நடந்த மோதல்களின் போது மக்கள் இறந்த போது அமெரிக்காவும், மேற்குநாடுகளும் அழுத அழுகை கல்நெஞ்சையும் கரைத்து விடும். இவர்கள் தான் முள்ளிவாய்க்காலில் மக்கள் துடிக்க துடிக்க இறந்த போது இலங்கை அரசிற்கு ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கியவர்கள். போர் முடிந்த பிறகும் மக்களை முகாம்களிலும், சிறைகளிலும் அடைத்து வைத்திருக்கும் இலங்கை அரசுடன் வியாபார ஒப்பந்தம் செய்பவர்கள். இவர்கள் தான் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு தவணை முறையில் விசாரணை நடத்தி தண்டனை வாங்கி தருவார்கள் என்று கைப்பிள்ளைகள் கதை விடுகிறார்கள்.

இதே மார்ச் மாதம் பதினாறாம் திகதி அறுபத்தெட்டாம் ஆண்டு வியட்நாமின் மை லாய் என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் 347 கிராம மக்கள் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டார்கள். இது அமெரிக்க இராணுவத்தின் கணக்கு. மக்களின் கணக்குப்படி 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். தங்களிற்கு எந்தவிதத்திலும் சம்பந்தமில்லாத வியட்நாமிலே அமெரிக்கா ஒரு நாளிலே கொன்ற மக்களின் எண்ணிக்கை இது. பற்றி எரிந்து கொண்டிருந்த கிராமத்திலே இருந்து ஆடைகள் எரிந்தபடி தோல் கருகியபடி சின்னஞ்சிறு பெண்குழந்தை ஒன்று கைகளை விரித்தபடி கதறிக் கொண்டு வந்த காட்சி புகைப்படமாக, அமெரிக்காவின் கொலைகளின் சாட்சியமாக இன்றும் இருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களை இலங்கை அரசுடன் சேர்ந்து கொன்ற இந்திய அரசின் எஜமானியையே சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்ட அரசியல் விஞ்ஞானிகள் இவர்கள். பாரத மாதா கண்ணீரும் கம்பலையுமாக, இலங்கைத் தமிழர்களிற்கு பிரச்சனைகள் இருக்கின்றன. நாங்கள் இலங்கை அரசிடம் தமிழ் மக்களிற்காக பேசுகிறோம் என்றாராம். தமிழ் மக்களைப் பற்றி பேசும் போது சோனியாவின் கண்களில் ஈரம் கசிந்தது என்று கண்டுபிடித்தவர்கள் இவர்கள்.

எந்த ஒரு பிரச்சனைக்கும் மக்கள் போராடும் போதே தீர்வு கிடைக்கும். ஏகாதிபத்தியங்கள் மூலம் தீர்வு கிடைக்கும் என்பவர்கள் தங்களின் நலன்களிற்காகவே ஏகாதிபத்தியங்களின் கால்களிலே விழுகிறார்கள். மக்கள் எதிரிகளை இனம் காண்பது போல் எதிரிகளின் ஏஜெண்டுகளையும் இனம் கண்டு கொள்ள வேண்டும்.



# கடந்தகாலத்தை யாரால் மறக்க முடியும்?

ஜெனீவா மனித உரிமைகள் மாநாடு தற்போது நடந்து கொண்டிருக்கிறது. இலங்கை தொடர்பில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையின் நகல்கள் மாநாட்டில் சம்பந்தப் பட்டவர்களிடம் விநியோகிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் சிவில் யுத்தத்தின்போது நடந்த மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் சுயேட்சை விசாரணையை நடத்துமாறு இலங்கைக்கு அறியத்தரும் விடயங்கள் இந்த பிரேரணையில் அடங்கியுள்ளன. இலங்கையில் அவ்வாறான சுய விசாரணையொன்று நடத்தாதவிடத்து, சர்வதேச விசாரணை தேவைப்படுமென்பதாக உலக பலவான்களினால் தொடர்ந்து வற்புறுத்தி வரும் விடயமாகும்.

யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக ராஜபக்ஷ அரசாங்கம் அடிக்கடி வெளியிட்ட கருத்துக்கள் இருக்கின்றன. யுத்தத்தின்போது எந்த □சாதாரண மனிதனும் கொல்லப்படவில்லை□ என்ற நிலைப்பாட்டில் (நசழ எடிடைடையெ உயளரயடவைநௌ) என்ற கோடாபய நிலைப்பாட்டில் இருந்தது. பின்னர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள்கட்டமைப்பு ஆணையத்தை நியமித்து தேசிய மீள்கூட்டமைப்பிற்கான ஆலோசனையொன்றை அரசாங்கம் பெற்றுக் கொண்டது. இதன்போது யுத்தக் குற்றச்சாட்டுகளுக்காக □பொறுப்புக்கூறல்□ஐ தவிர்த்து □மீள்கூட்டமைப்பு□ (அதாவது மீண்டும் நண்பராதல்) என்ற விடயத்தை முன்வைப்பதற்கு அரசாங்கம் முயன்றது.

யுத்தக் குற்றங்கள் சம்பந்தமான பிரச்சினை எழுப்பப்படும்போது, அரசாங்கத்திடம் எப்போதும் இருந்த பதில் தான்□ பழைய புண்ணை தோண்டுவது□ னால் இனங்களுக்கிடையிலான இடைவெளி அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கும் என்பதாகும். கடந்த பொதுநலவாய மாநாட்டுக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாகொப் சுமா வந்தபோது அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து பழைய புண்ணை தோண்டும் கதைக்கு சமாந்திரமாக புதிய ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டது. அது நிறவெறி ஆட்சி முடிவடைந்த பின்னர் தென்னாபிரிக்காவினால் நியமிக்கப்பட்ட உண்மை மற்றும் மீள்கூட்டமைப்பு மாதிரியான ஆணையமொன்றை இலங்கையில் நியமிப்பதாகும்.

நிறவெறி ஆட்சிக் காலத்தில் நடந்த பயங்கர செயற்பாடுகள் சம்பந்தமாகவே 1995ல் நெல்சன் மண்டெலாவின் அரசாங்கம் உண்மை மற்றும் மீள்கூட்டமைப்பு ஆணையத்தை நியமித்தது, நிறவெறி ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட டெஸ்மன்ட் டுடு என்ற கிறிஸ்தவ பாதிரியார் இந்த ஆணையத்தின் தலைவராக இருந்தார். தண்டனைக்கு பதிலாக மன்னிப்பளிப்பதே ஆணையத்தின் நோக்கமாக இருந்தது. நிறவெறி ஆட்சிக் காலத்தில் தம்மால் செய்யப்பட்ட அநியாயங்கள் குறித்து ஆணையத்தின் முன்பாக சாட்சியமளிப்பதற்கு நிறவெறி ஆட்சியாளர்களோடு ஒத்துழைத்தவர்களும், அந்த ஆட்சிக்கு எதிராக போராடிய அமைப்புகளின் உறுப்பினர்களும் இதன் மூலம் ஊக்குவிக்கப்பட்டனர். அங்கு தாம் அளிக்கும் சுய வாக்குமூலத்தை கேட்டுக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் குற்றவாளியை மன்னிப்பார்கள். நடந்த அனைத்து சம்பவங்களினதும் உண்மைகளை சுய வாக்குமூலத்தின் மூலம் வெளிக் கொண்டு வருவதும், புரிந்துணர்வின் அடிப்படையில் கடந்தகால தவறுகளை மறந்து மீள்கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஊக்குவிப்பை கறுப்பு வெள்ளை இன மக்களுக்கு மத்தியில் உருவாக்குவதுமே இதன் நோக்கமாகும்.

தன்னால் புலிகள் இயக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட புனித யுத்தத்தில் சாதாரண தமிழ் மகனின் மயிர் காலுக்காவது பாதிப்பு ஏற்படவில்லையென சமீபகாலம் வரை சத்தியம் செய்துக் கொண்டிருந்து ராஜபக்ஷ சர்வாதிகாரத்திற்கு திடீரென நெல்சன் மெண்டெலாவின் □ மன்னிப்பளிக்கும் ஆணையம்□ நினைவுக்கு வருவது ஏன்? தேன்னாபிரிக்காவின் நிறபேத ஆட்சியில் கறுப்பு மற்றும் வெள்ளை இன மக்களுக்கு மத்தியில் அரசியல் சம்பந்தமான விடயத்தில் கறுப்பின மக்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தினர். கடந்த காலத்தில் நடந்த தவறுகளுக்கு தண்டனையளிக்காது மன்னிப்பளிக்கும் முறையொன்று கடைபிடிக்கப்பட்டது வெள்ளை இனபேதம் வீழ்ச்சியடைந்த பின்னர் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட- அதுவரை மிதிபட்டுக் கொண்டிருந்த □ கறுப்பின மக்களைக் கொண்ட அரசாங்கத்தினாலேயேயாகும். அதாவது பழைய தவறுகளை மறந்துவிடுவோம் என்ற கூறுவது குற்றவாளியல்ல குற்றமிழைக்கப்பட்டவராகும். ஆனால், இலங்கையில் நடப்பது என்ன? யுத்த சூன்யப் பிரதேசம் என அரசாங்கத்தினாலேயே பெயரிடப்பட்ட வலயங்களுக்குள் உயிர் பிழைப்பதற்காக ஓடி வந்த மக்களின் தலை மீது ஷெல் குண்டுகள் போடப்பட்டு நிராயுதபானிகளான தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் படுகொலை செய்த அரசாங்கம் இப்பொது □பழைய புண்ணை தோண்ட வேண்டாம்□ அது குறித்து கதைக்காதிருப்போம் என ஆலோசனை கூறுகிறது. தவறுகளை மறந்துவிடுவோம் என குற்றவாளிகளே கூறுகின்றனர். அதுமாத்திரமல்ல, அரசாங்கம் இவ்வாறாக பழைய தவறுகளை மறந்து விடுவோம் என தமிழ் மக்களுக்கு கூறுவது இன்றும் கூட உக்கிரமான இராணுவ அழுத்தத்தின் கீழ் சர்வாதிகார ஆட்சியை வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது சுமத்திக் கொண்டேதான். அதாவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை மிதித்துக் கொண்டு தம்மால் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில்தான்.

குற்றவாளிக்கு அனைத்தையும் மறந்துவிட்டு புதிதாக வாழ்க்கையை ஆரம்பிப்பது குறித்து கதைப்பு இலகுவானதுதான். ஆனாலும் ஒடுக்கப்பட்டவரும், குற்றமிழைக்கப்பட்டவரும் கூறும் கதைதான் மிக முக்கியமானது.

### நுகர்வாக்கம் உருவாக்கும்

பெண்ணின் உழைப்பு பொருளாதார ரீதியாக சமூக அங்கிகாரம் பெற்றதன் மூலம் பெண்ணை நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்ததன் மூலம் பெண்ணின் பாத்திரத்தை உயர்த்தியது. முதலாளித்துவ சமூக கட்டமைப்பு கொண்டிருந்த ஜனநாயகம், குடும்ப ஜனநாயகத்துக்கு மேலும் அடிப்படையாகியது. நிலப்பிரபுத்துவ குடும்பங்களின் இடத்தில், ஜனநாயகக் குடும்பங்கள் தோற்றியது. சமவுரிமை உள்ள, சம அந்தஸ்துள்ள பாலியல் நடத்தையில், இணக்கமான இயற்கையான பாலியல் தன்மைக்கு வழிகாட்டியது.

ஆண் பெண் இடையில் சுதந்திரமும், ஜனநாயகமும், முதலாளித்துவத்தின் முரணற்ற ஜனநாயகத்தின் கூறாகியது. முரணற்ற ஜனநாயகம் எங்கெல்லாம் நிலவியதோ, அங்கெல்லாம் ஆண் பெண்ணின் சமத்துவம் முரணின்றி காணப்பட்டது. முதலாளித்துவ ஜனநாயகம் எங்கெல்லாம் முரணானதாக நிலவியதோ, எங்கு தனிவுடமையின் மேலாதிக்கம் நிலவியதோ, அங்கு முதலாளித்துவ ஆணாதிக்க குடும்பமாக நீடித்தது. முரணற்ற ஜனநாயகமே, ஆண் பெண்ணின் சமத்துவத்துக்கு அடிப்படையாக இருந்தது, இருக்கின்றது.

மனித உறவுகள் கூட நுகர்வு சார்ந்த அடிப்படையில் குறுகிவிடுகின்றது. குடும்பங்களும், அதற்கென்று இருந்த சமூக வடிவமும் கூட நுகர்வாக்கம் பெற்று வருகின்றது. கூட்டு சமூக அமைப்பில் இருந்து, தனிவுடமை அடிப்படையிலான நிலப்பிரபுத்துவ அமைப்புடன் பின்னிப் பிணைந்த ஆணாதிக்க குடும்பங்கள், முதலாளித்துவ சமூக அமைப்பில் ஜனநாயக குடும்பங்களாக மாறிவந்தது. அதை நுகர்வாக தனிவுடமை கண்ணோட்டம் அழித்துவிடுகின்றது.

கட்டுப்பாடான நிலப்பிரபுத்துவ பாலியல் நடத்தையும், ஜனநாயக பூர்வமான முதலாளித்துவ பாலியல் நடத்தையும், வரைமுறையற்ற நுகர்வாகிய ஏகாதிபத்திய பாலியல் நடத்தையாகி வருகின்றது. இதன் அடிப்படையில் பாலியல் கண்ணோட்டங்களும், முரண்பாடுகளும் காணப்படுகின்றது.

சமூக பொருளாதார ரீதியாக முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாறிய போது, முரணற்ற ஜனநாயகம் மறுப்புக்கு உள்ளாகியது. தன் தேசிய சந்தையைக் கடந்து முதலாளித்துவம் உலகச் சந்தையை நோக்கி ஏகாதிபத்தியமாகிய போது, ஜனநாயகத்தை மறுத்தல் பிரதான வடிவமாகியது. காலனி (காலனி, அரைக்காலனி, நவ காலனி) மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள், ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாடுகள், சந்தையை மையப்படுத்தியதாக காணப்படுகின்றது. இது ஜனநாயக மறுப்பாகவும், தன் பொருளை முதன்மைப்படுத்தியும், வரைமுறையற்ற நுகர்வாக்கத்தையும் தூண்டி விடுகின்றது. ஜனநாயகத்துக்கு இடமின்றிப் போகின்றது. இதனால் ஆண் பெண் சமத்துவத்திற்கு இடமில்லை. நுகர்வுச் சந்தைக்கு ஏற்ப, பெண்ணுக்கு புதிய வேசம் போடப்பட்டது. சந்தையை ஆக்கிரமிக்கவும், கைப்பற்றவும், சந்தையின் ஆன்மாவாக பெண் உடல் வடிவமைக்கப்பட்டது. பொருள் சந்தைப்படுத்தலில் உள்ள போட்டி பொருளில் கவர்ச்சியையும், ஆபாசத்தையும், வக்கிரத்தையும் புகுத்தியே, நுகர்வுவெறியை ஊட்டுகின்றனர். இந்த அடிப்படையில் பெண்ணை முன்னிறுத்தி அவளை கவர்ச்சிப் பொருளாக, ஆபாசப் பொருளாக அலங்காரம் செய்து, பொருளை பெண்ணின் ஊடாக முன்னிறுத்துகின்றது. பெண்ணின் உடலை சந்தைக்குரிய பொருளாக்கி இருக்கின்றது. பெண்ணின் பாலியல் உறுப்புகளை, சந்தையின் ஆன்மாவாக்கியது. ஏகாதிபத்தியத்தில் பெண் என்பவள் சந்தையின் நுகரத் தூண்டும் பாலியல் பண்டமாக. பொருளை வரைமுறையின்றி நுகர்வது போல், பெண்ணை நுகர்வதே சந்தைக்குரிய செயற்பாடாகியது. ஏகாதிபத்தியத்தில் ஆணாதிக்கம் என்பது நுகர்வாக்கம் சார்ந்தது.

ஆணாதிக்க ஏகாதிபத்தியத்தில் பெண்ணின் சுதந்திரம் என்று அது வரையறுப்பது, ஆணாதிக்க நுகர்வாக்கத்தை அனுசரிக்கின்ற அதை அனுபவிக்கின்ற பெண்ணின் சுய நுகர்வாக்கமாகும். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ ஆணாதிக்க சமூக அமைப்பில் பெண் இணங்கி எப்படி வாழ்ந்தாளோ, அதே போல் ஏகாதிபத்திய நுகர்வாக்க ஆணாதிக்க அமைப்பில் பெண் சுதந்திரமான நுகர்வுப் பண்டமாக மாற்றப்பட்டு இருக்கின்றாள்.

தன் உழைப்புக்கு உரிமை கோர முடியாது பிறருக்கு உழைப்பது போல், பெண் இயற்கைக்குள்ளான சமூக தன்மையை முன்னிறுத்தி பாலியல் நடத்தை கொண்டு வாழ முடியாது, மாறாக நுகர்வுக்கு உட்பட்டவளாக, அதே நுகர்வை தானும் அனுபவிப்பதே பெண்ணின் இருப்புக்குரிய இடமாகின்றது. பெண் உடலை நுகர்வுக்குரிய ஒன்றாக சந்தை கட்டுப்படுத்துகின்றது. சந்தைக்கு வெளியில் பெண்ணின் உடலுக்கு சுதந்திரம் கிடையாது. ஆணைவிடவும் சமூக உயிரியாக உள்ள பெண்ணின் இயற்கைக் கூறை, நுகர்வாக்க சந்தை மறுதளித்து விடுகின்றது.

உண்மையில் இயற்கை சார்ந்த சமூக நடத்தையின் பாலியல் ஒரு கூறு. இப்படி இருக்க உலகமயமாதல் நுகர்வாக்கமே மனித சாரமாகும் போது, பாலியல் நடத்தைகள் சமூக கூறாக இருப்பதில்லை. மாறாக சந்தைப் பொருளாக, வரைமுறையின்றிய நுகர்வாக்கத்துக்குரிய செயற்பாடாக பாலியல் நடத்தையை மாற்றி இருக்கின்றது. பசி, தாகம் போன்றதே பாலியல். ஆனால் பாலியல் சந்தையின் கவர்ச்சிப் பொருளாக, நுகர்வைத் தூண்டும் பொருளாக மாறி இருக்கின்றது. சமூக உறவாக்கமான இயற்கை சார்ந்த பாலியல் நடத்தையை, நுகர்வு நடத்தையாக்கி இருக்கின்றது.

ஜனநாயகத்தின் முரணற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ குடும்பங்கள், வக்கிரமான நுகர்வு பண்பாட்டுக்குள்ளாகி வருகின்றது. தனித்தனி சொத்துடமை கொண்ட, எதிர்நிலை கொண்ட முரண் கூறுகளாகி விடுகின்றது. உடல் இச்சையைக் கூட, ஆணாதிக்க தனிவுடமையின் ஒழுக்கக்கேட்டுக்கு வெளியில் ஆணோ பெண்ணோ பெறமுடியாது. அதே போல் நுகர்வாக்கச் சந்தை கலாச்சாரத்துக்கு வெளியில் பாலியல் நடத்தை இருப்பதில்லை. இங்கு ஒரு எதிர்மறையான போராட்டம் என்பது, சமூகத் தன்மையை நோக்கிய இயற்கைக்கு திரும்புதல் தான். சமூகத் தன்மையைக் கொண்ட சமூகமாக புரட்டி போட போராடாத வரை, பாலியல் நடத்தை என்பது திருப்தியற்ற நுகர்வுக்கும், மகிழ்ச்சியற்ற வாழ்க்கைக்குள் புலம்புவதற்குள்ளும் தான் தொடரும்.

### நடிகர்கள் ஏராளம் ஆனால்

மறுபுறம் பழைய கதாபாத்திரங்கள் இருக்கின்றன. ரணில் தொடர்ந்தும் கருவாத்தோட்ட பிரபுக்கள் வர்க்கத்தின் சங்கநாதத்தை முழங்கிக் கொண்டிருக்கிறார். மங்கள சமரவீர தாராளமய பேச்சுக்களை பேசிக்கொண்டு அரசியல் சதிராட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார். பொன்சேகா தான் இன்னும் இராணுவத் தளபதி என்ற எண்ணத்தில் பட்டாளத்தோடு சென்று ஆட்சியைப் பிடிப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார். மவிமு மலட்டுத் தன்மையிலிருந்து மீள்வதற்காக எந்த குப்பைத் தொட்டியிலும் விழுவதற்கு தயாராகி வருகிறது. தேர்தலில் இவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, தேர்தல் முடிவுகளில் எந்த மாற்றமும் இருக்காது. தேர்தலுக்காக மேடைகளில் கொக்கரிக்கும் இவர்களால் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆகவே பிரச்சினை என்னவெனில், தேர்தலில் யார் வென்றாவது பிரச்சினைகள் தீர்க்கப்படுமென காத்திருக்கும் அரசியலுக்கு பதிலாக தமது விடுதலைக்கான பாதையை தமது கைகளினாலேயே வெட்டிக் கொள்ளும் அரசியலை ஒடுக்கப்பட்டவர்களுக்காக கொண்டுவருவது எப்படி என்பது குறித்து சிந்திக்க வேண்டிய தருணம் இது. இந்த போலி தாராளமயவாதிகளின் ஜனநாயத்தை வென்று, அதன் பின்னர் அந்த ஜனநாயகத்தின் கீழ் போராடுவோமென குதர்கம் செய்யும் அடிவருடிகளை பின்வாங்கச் செய்வது எப்படி? அதற்குப் பதிலாக போராடுவதற்கு மாற்றீடொன்றை மக்களுக்கு அமைத்துக் கொடுப்பது எப்படி? இடது சாரியம் இந்தப் பிரச்சினைகள் மீதுதான் கவனம் செலுத்த வேண்டும். அதற்காகத்தான் இடதுசாரி இயக்கமொன்று தேவைப்படுகிறது.

### "தமிழன்" என்ற அடையாள அரசியலும், அதன்

கூட்டமைப்பும் - புலிகளும் முன்வைத்த இனவரசியல் எப்போதும் மக்களுக்கு எதிரானதே

இதன் அடிப்படையில் இந்த அரசியல் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் சார்ந்தல்ல. குறிப்பாக பரந்துபட்ட உழைத்து வாழும் தமிழ் மக்களைச் சார்ந்தல்ல. மாறாக தமிழ் மக்களைச் சுரண்டி வாழும் "தமிழனைச்" சார்ந்தது. இது மேற்குநாடுகளினது ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கைக்கும், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க பொருளாதார நலனுக்கும் சார்பானது.

எந்தக் குறுகிய அடையாளளுமுமற்ற வண்ணம், மக்களை முன்னிறுத்தியதல்ல. அதாவது சுரண்டல், சாதி, பிரதேசவாதம், மதம்... என்று எந்தக் குறுகிய அடையாளமுமற்ற, தமிழனைத் தமிழன் அடக்காத ஒடுக்காத தூய்மையான இனவரசியல் அல்ல.

கூட்டமைப்பு, முதலாளித்துவ சுரண்டலை முன்னிறுத்தும் தரகுக்கட்சி. தரகுமுதலாளித்துவத்தையும், நிலப்பிரபுத்துவ எச்சசொச்சங்களையும் பாதுகாக்கும் கட்சி. மேற்கு ஏகாதிபத்தியங்களின் சூறையாடலையும், உலக மேலாதிக்கங்களையும் ஆதரித்து, அவற்றின் அதன் தயவில் இயங்கும் கட்சி. இந்த அரசியல் அடிப்படையில் தான், புலிகள் கூட ஆயுதப் போராட்டத்தை நடத்தி முள்ளிவாய்க்காலில் மக்களைப் பலியிட்டனர்.

இதனால் தான் இனவொடுக்குமுறைக்கு எதிராக, உழைத்து வாழும் சிங்கள மக்களைச் சாராது, சுரண்டும் அரசு சார்ந்து தீர்வு காண்பது பற்றி பேசுகின்றது. அரசுக்கும் சிங்கள உழைக்கும் மக்களுக்குமான போராட்டத்தை ஆதரித்து அரசை தோற்கடிப்பதற்குப் பதில், உழைக்கும் சிங்கள மக்களின் போராட்டத்துக்கு எதிராகவே கூட்டமைப்பின் அரசியல் உள்ளது.

இதனாலேயே உழைத்து வாழும் 90 சதவீதமான தமிழ் உழைக்கும் மக்களைச் சாராது, அதற்கு எதிராகவுள்ளது. உழைக்கும் மக்களைச் சாராத, சுரண்டும் வர்க்க அரசியலை முன்னெடுக்கும் கூட்டமைப்பு அரசியல் மூலம், தமிழ் மக்கள் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இந்த அரசியல் மக்களை ஏமாற்றுகின்ற, மோசடி செய்கின்ற அரசியலாகும். இதுதான் பல பத்து வருடங்களாக மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படுகின்றது. இதனால் தோற்றுப்போன வரலாறாகவும், தமிழன் சுரண்டப்படவும் இனரீதியாக ஒடுக்கப்படுவதற்கான அடிப்படையாகவும் தொடர்ந்து நீடிக்கின்றது.

இனவாத அரசியலுக்கு மாறாக, வெல்லக் கூடிய அரசியல் வழி எது?

ஏகாதிபத்தியங்கள், அவர்களின் அடிவருடிகளான தமிழ் இனவாத அரசியல்வாதிகளை நம்புவதை விடுத்து, மக்களே இன ஒடுக்குமுறை சார்ந்த பிரச்சனைக்குகளுக்குத் தீர்வு காணும் வழியைக் கண்டடைவது இன்று அவசியமானதாகும். தொடர்ந்தும் "சிங்களவன் " தீர்வு தராமல் ஏமாற்றுவதாகக் கூறும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

இனவாதத்தின் கடந்தகால அனுபவமும், உலக அனுபவமும் இனவாதம் தீர்வைத் தராது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. ஒடுக்கும் இனவாதமும் சரி, ஒடுக்குவதற்கு எதிரான இனவாதமும் சரி, இரண்டுக்கும் வேறுபாடு உண்டா? மக்களைப் பிளக்கும் இனவாதம் அது எதுவானாலும் பகுத்தறிவுபூர்வமானதா? மனிதத்தன்மை கொண்டதா? இயற்கையானதா? எனின், இல்லை.

எந்த இனவாதக் கோட்பாடுகளும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. அது குறுகியது. ஒரு தலைப்பட்சமானது. பழமைவாதம் சார்ந்தது. பிற்போக்குத்தனமானது, காட்டுமிராண்டித்தனமானது, வன்முறையானது, இயற்கைக்கு முரணானது. மனித அறிவுக்கு ஒவ்வாதது. இதன் செயற்பாடுகள் வெறுப்புக்குரியது. மூடபக்திக்குரியது, கற்பனைக்குரியது. சாராம்சத்தில் சமூகத்தன்மை கொண்டதல்ல, முற்போக்கானதுமல்ல.

இந்த இனவாதத்தை அறிவுபூர்வமாக நாம் சிந்தித்து கேள்வி கேட்டாக வேண்டும். பகுத்தறிவு மூலம் கேள்வி கேட்டு, இனவாதத்தை அதன் சிந்தனை சார்ந்த அரசியல் நடவடிக்கைகளை அழித்தொழித்தாக வேண்டும். இனவாதத்தை எதிர்ப்பதற்கு இனவாதத்தையே பதிலாக கொண்டு செயற்படுவதை நிறுத்தவேண்டும். பிற இனவாதத்தை மட்டுமல்ல, தன் இனவாதத்தையும் ஒழித்துக்கட்ட வேண்டும்.

அனைவரையும் சுரண்டும் அரசாக அரசு இருப்பதால், அரசுக்கு எதிராக அனைவரையும் ஒருங்கிணைத்துப் போராட வேண்டும். இனவொடுக்குமுறையை மட்டுமல்ல, ஆணாதிக்கம், பிரதேசவாதம், சாதியம்.. என அனைத்து ஒடுக்குமுறையையும் எதிர்கொண்டு போராடுவதன் மூலம், வெல்வதற்கென ஒரு உலகம் இருக்கின்றது. இதைச் செய்யுமாறு, அரச ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய இலங்கை மக்களின் கடந்தகால வரலாறு எம்மைக் கோருகின்றது.

### புரட்சிகரப் பெண்ணிய

பெண்ணொடுக்குமுறை சார்ந்த சமூக விளைவுகள், விடயங்களைப் பற்றி சமூக அமைப்புகள் மூலம் பிரச்சாரம் செய்து விபச்சாரத்தை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோருகிறது.

மேற்படி விபச்சாரத்துக்கு எதிரான நோர்வேஜிய மற்றும் ஸ்வீடன் சட்டங்கள் பல நாடுகளினாலும், தமது நாடுகளிலும் நிறைவேற்ற ஆய்வு செய்யப்படுகிறது. குறிப்பாக இடதுசாரி அரசியற் கண்ணோட்டமுள்ள ஐரோப்பிய நாடுகள் இச்சட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்கின்றன.

இதேவேளை, இச்சட்டங்களை இல்லாதொழிப்பதற்கும், விபசாரத்தில் ஈடுபடுபவர்கள் அரசுக்கான வரி செலுத்துவதன் மூலம் விபச்சாரத்தைத் தொழிலாக அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரும் சக்திகளுக்கும் குறைவில்லை. இச்சக்திகள் யார் என்பதும், அவர்களின் அரசியல் என்னவென்பதும் விளங்கிக் கொள்ளக் கஷ்டமானது அல்ல. இன்றுள்ள நவதாராளப் பொருளாதர கட்டற்ற நுகர்வியர் சமூகச் சிந்தனைக்கேற்ப அரசியல் செய்யும் மனிதயநேயமற்ற முதலாளித்துவ அரசியற்சக்திகளே அவர்கள். பணக்காரர்கள், அதிகாரம் படைத்தோர் மேலும் மேலும் பணக்காரராகவும், அதிகாரம் கொண்டோராகவும் ஒடுக்கப்பட்டவர்கள், வறுமையில் வாடுவோர் மென்மேலும் ஒடுக்கப்பட்டு வறுமையில் வாடவேண்டுமென விரும்பும் கீழ்த்தரமான அரசியல் செய்வோரே, மேற்படி விபச்சாரத்தின் மூலம் பெண்கள் மீதான வன்முறையை அவர்களின் உடலை, நவதாராளப் பொருளாதாரச் சிந்தனைக்கேற்ப நிறுவனமயப்பட்டமுறையில் பணம் சம்பாதிக்கும் பண்டமாற்றுப் பொருளாக மாற்ற முனைவோராவார்.

முடிவாக :

மேற்கூறிய மேற்கத்தைய பிற்போக்குத்தனமான, கொடுமைக்கார பெண்ணொடுக்குமுறையாளர்களின் அடியொத்தியே, நம்தேசத்தின் பெண்களை சிறுவர்களை, அவர்களின் உடல்களை சமூக மற்றும் சட்ட அங்கீகாரம் கொண்ட சந்தைப்பண்டமாக மாற்றும் வேலையில் இறங்கியுள்ளனர், இலங்கையில் இயங்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும், அவைகளின் அடிவருடிகளாக இயங்கும் உள்நாட்டுத் தொண்டர் நிறுவனங்களும், போலிப்பெண்ணியவாதிகளும்.

மேற்கூறியபடி சர்வதேச சக்திகளின் உதவியுடனேயே நவதாராளப் பொருளாதாரத்தின் கட்டமைப்பை நமது தேசத்தில் நிறைவு செய்யும் நோக்குடன், அதற்கு இயைபாக விபச்சாரத்தை சட்டமாக்கக் கோருகின்றனர் உள்நாட்டு அடிவருடிகளும், சர்வதேச மூலதனத்துக்கு தரகு பார்த்துக் கூட்டிக் கொடுப்போரும்.

இதற்கெதிராக மக்கள் நலம் சார்ந்து இயங்கும் பெண்ணியப் புரட்சிகர சக்திகளும், ஜனநாயக மக்கள் சக்திகளும், மற்றைய நாடுகளில் நடைபெறும் போராட்டங்களிலிருந்து கற்றுக் கொண்டவண்ணம், நமது தேசத்திற்கேற்ற வேலைத்திட்டத்தை உருவாக்கி, மக்களை அணிதிரட்டும் வேலைகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

# மாதர் தினம் நினைவு கூரப்பட்டது

மார்ச் 8ம் திகதி சர்வதேச மாதர் தினத்தின் நிமித்தம் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பினால் கட்டுநாயக சுதந்திர வர்த்தக வலயத்தில் நடத்தப்பட்ட வீதிநாடகத்தின. போது எடுக்கப்பட்ட புகைப்படங்களும், பெண்கள் மீதான அழுத்தம் சம்பந்தமான புகைப்படங்களின் கண்காட்சியும், மக்களுடன் நடத்திய கருத்தாடல் சம்பந்தமான புகைப்படங்களும்.





# வெளிவேறியவிலிருந்து ஹங்வல்ல வரை

ஹங்வல்ல, துன்னான பிரதேசத்தில் செயற்படும் இறப்பர் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவுகள் காரணமாக குடிநீர் மாசடைவதாகக் கூறி ஹங்வெல்ல, துன்னான பிரதேச மக்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினாலும், கடிதங்கள் அனுப்பினாலும் கெஞ்சினாலும் எவ்வித் தீர்வும் கிடைக்கவில்லையென பிரதேச மக்கள் கூறுகின்றனர். இதனால் வெளிவேறிய, ரத்துபஸ்வலையில் நடந்ததைப்போன்று போராட்டத்தின் பாதையை தெரிவு செய்யவேண்டிய நிலை அம்மக்களுக்கு ஏற்பட்டது. வீதியிலிறங்கி நாள்பூராவும் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தேர்தல் காலங்களில் அவர்களது வாக்குகளை ஏமாற்றிப் பறிப்பதற்கா மண்டியிட்டு வரும் எந்தவொரு அரசியலவாதியும் திரும்பியும் பார்க்கவில்லை. அரச அதிகாரியை அனுப்பி பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கும் முயற்சிக்கவில்லை. இறுதியாக வீதியில் முகாமிட்டு தீர்வு கிடைக்கும் வரை ஆர்ப்பாட்டத்தை தொடருவதென அம்மக்கள் முடிவெடுத்தார்கள். ஆனால், அன்றிரவு ஆர்ப்பாட்டத்தை அடக்கும் நோக்கத்தில் ஆளும் கட்சியின் விஷப் பற்கள் செயற்படத் தொடங்கின.

மறுநாள் காலையில் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் முதாலாளித்துவ மூலதன செயற்பாட்டை பாதுகாக்கும் நோக்கில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக தடியடிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர் புகை குண்டுகளை எறிந்தனர். (இவற்றில் சில அருகாமையிலுள்ள வீடுகளுக்குள் விழுந்தமையால் அவ்வீட்டில் இருந்தவர்கள் பாதிப்புக்குள்ளானார்கள். சிறு குழந்தைகளுக்கு ஏற்பட்ட மூச்சுத்திணரலால் அக்குழந்தைகள் இன்றும்கூட மூச்சுவிட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன). என்றாலும் மக்கள் கலைந்து செல்லவில்லை. உறுதியோடு நின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்ட கிராம மக்களை பொலிஸார் கைது செய்து இழுத்துச் சென்றனர். இதனால் கோபமடைந்த மக்கள் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறும், தாக்குதலை நிறுத்திவிட்டு பிரச்சிணைக்கு தீர்வு தருமாறும் கேட்டு மேலும் உத்வேகத்துடன் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். போராட்டத்தின் ஒரு நடவடிக்கையாக தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காகவும், அடக்குமுறை படைகள் வரும் பாதைகளில் தடைபோடுவதற்காகவும் பாதைக்குக் குறுக்காக மரங்களை வெட்டிச் சாய்த்தனர். வெட்டப்பட்ட மரமொன்று வீழ்ந்து படுகாயமடைந்த ஒரு பொலிஸ் அதிகாரி மரணமடைந்தார். மக்களின் கோரிக்கைளை நிறைவேற்றாது அவர்களை அடக்கி ஒடுக்க முயன்ற ஆட்சியாளர்களே இந்த மரணத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அதை விட்டுவிட்டு மாசற்ற நீர் கேட்டு போராடிய மக்களை கடந்த காலங்களில் நடந்த இவ்வாறான சம்பவங்களை கவனத்திலெடுக்காமல் துன்னான பிரதேச மக்கள் மீது தொடுக்கப்படும் அடக்குமுறைய அறிந்துகொள்ள முடியாதது மட்டுமல்ல, போராட்டத்தின் அன்றைய மற்றும் இன்றைய நிலையை சரியாக புரிந்து கொள்ளாமல் விளக்கமளிக்கவும் முடியாது. மக்களின் கோரிக்கையை ஆராயந்து அதற்கு தீர்வு வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவில்லை என்பது இந்த சம்பவத்தின் மூலம் தெரிகிறது.

பொதுவான விடயமொன்றுக்காக வீதியிலிறங்கி போராடும் மக்கள் மீது அரச அடக்குமுறை கண்மூடித்தனமாக பாய்ந்திருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வீடியோ படமெடுத்த பாதுகாப்புப் படைகளின் புலனாய்வுப் பிரிவு, அதில் காணப்படும் நபர்களை தேடி வலை விரித்திருக்கிறது. தவிரவும் இதன் பின்னணியில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுபவர்களும் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது. நிலைமை கொடூரமாகவும் அராஜக நிலையிலும் உள்ளது. ஒரே நோக்கத்திற்காக ஒன்று சேர்ந்த மக்கள் மீது அடக்குமுறை பாய்ந்ததினால் மக்கள் பீதியில் காணப்படுகின்றனர். துன்னான போராட்டத்தின் உறுப்பினர்கள் பொது நோக்கத்தை கொண்ட சமூகத்தில் இருந்தாலும் இப்போது தனித்தனி நபர்களாக பிரச்சிணைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

பொது நோக்கத்திற்காக போராடும் உறுப்பினர் அடக்குமுறையின் தாக்கத்தால் தனித்து விடப்படுகிறார். அவர் போராட்டத்தின் பொதுவான கூட்டிணைவிலிருந்து மட்டுமல்ல, தான் இதுவரை நம்பியிருந்த பொது நோக்கத்திலிருந்தும்கூட ஒதுங்கிப்போகுமளவுக்கு அரச அடக்குமுறை பயங்கரமாக செயல்படுகிறது. மனித வரலாற்றின் போராட்டத்திற்குள் இன்றைய சமூகத்தின் உளவியல் காரணங்களையும், ஆளுமை தொடர்பிலான காரணங்களையும் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் எந்த பகுப்பாய்வாக இருந்தாலும் ஒன்றை மட்டும் குறிப்பிட வேண்டும். வெலிவேரிய, ரத்துபஸ்வலவாக இருப்பினும், ஹங்வெல்ல, துன்னானவாக இருப்பினும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் பசப்பு வார்த்தைகளில் மயங்கிய சிலர் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை மாக்களாக கருதி செயற்பட்டமையால் மக்கற் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எப்படித்தான் ஏமாற்றினாலும், போராட்டப்பாதைக்கு மக்கள் செல்வதை ஆளுவோரால் தடுக்க முடியாது. போராட்டக் களத்தில் போர்க்குணத்தையும், அடக்குமுறை இயந்திரத்தையும் ஒரசேர சந்திக்கும்போதுதான். அவர்கள் அரசியல் அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள்.

ஆகவேதான் இச்சந்தர்ப்பத்தில் துன்னான போராளிகள் மத்தியில் இடதுசாரிய செயற்பாடொன்று தேவைப்படுகிறது. தாமதித்தாவது அதனை நிறைவு செய்ய வேண்டும். இன்றை நிலையில் கடுமையான அடக்குமுறை செயற்படுவது உண்மைதான். என்றாலும், இடதுசாரிய செயற்பாட்டாளர்கள் கை கால்களை கட்டிக்கொண்டு முடங்கிக் கிடக்க வேண்டுமா? அல்லது, மக்கள் போராட்டங்களை முகாமைத்துவம் செய்து முதாலாளிய மூலதனத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமா? என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதோடு, ஒடுக்கப்பட்டோரின் போராட்டத்தில் உறுப்பினர்களை தனிமைப்படுத்துவதா, அல்லது பலமான அரசியல் அமைப்பை பெற்றுக் கொடுப்பதா என்ற இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும்.

# பல்கலைக் கழகம் கொந்தளிக்கிறது

பல்கலைக் கழகங்களில் தோன்றியுள்ள பிரச்சிணைகள் காரணமாக பல பல்கலைக் கழகங்களில் போராட்டங்கள் தலைதூக்கியுள்ளன. அந்த போராட்டங்களின் சில காட்சிகள் எமது கெமராவில் பதிவாகியுள்ள விதம்





41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்ணிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.